Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 கார்த்திகை 01 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 13 (16.11.2005) புதன்கிழமை இதழ் 47

விலை: ரூபா 8.00

Dialog ඩයලොග් டயலொக்

kit எங்கேயும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.


T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

# தமிழீழத்தின் தேசிய சின்னங்கள் அறிவிப்பு!









படங்கள் - சங்கதி

யாழ்ப்பாணம்—

தமிழீழத்தின் தேசிய மலர், மரம், பறவை, விலங்கு என்பன நேற்று அறிவிக்கப்பட்டுள்ளதாக இணையத்தளத் தகவல்கள் தெரிவித்தன.

ஏற்கனவே கடந்த 2004 ஆம் ஆண்டு தமிழீழ தேசிய மலராக கந்தள் (கார்த்திகைப் பூ) அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வெற்றியின் சின்னமான வாகை தேசிய மரமாகவும், தமிழீழத்துக்கே சிறப்பான செம்பகம் தேசியப் பறவையாகவும், வேகம், மிடுக்கு அடங்கிய சிறுத்தை தேசிய விலங்காகவும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

# தாயகக் கோட்பாட்டை நிராகரித்தால் அரசு பேரழிவைச் சந்திக்க நேரிடும்!



## தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

கிளிநொச்சி—

தமிழர் தயாகக் கோட்பாட்டை நிராகரித்து - ஒற்றையாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே தீர்வென்று சிங்கள தேசம் முரண்டு பிடித்தால் அவர்கள் பேரழிவைச் சந்திக்கநேரிடும் என தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

சர்வதேச ஆங்கில இதழான ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கேள்வி - இந்தத் தேர்தலில் யார் வெற்றிபெறவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பதில் - இந்தத் தேர்தல் தொடர்பாக நாம் அக்கறை கொள்ளவில்லை. (11 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் போராளிகள் இருவர் அம்பாறையில் சுட்டுக்கொலை!

அம்பாறை—

அம்பாறை இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளிகள் இருவர் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனையைச் சேர்ந்த சுரேஷ் (வயது 26), விநாயகபுரத்தைச் சேர்ந்த வெள்ளை (வயது 22) ஆகிய போராளிகள் - அக்கரைப்பற்று முஸ்லிம் பகுதிக்கு நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றனர்.

அதன்பின்னர் அம்பாறை வீதி பள்ளிக்குடியிருப்பு அணைக்கட்டில் நேற்றுக்காலை இருவரின் சடலங்களும் சூட்டுக்காயங்களுடன் கண்டெடுக்கப்பட்டன.

இரண்டு போராளிகள் படுகொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா மோகன் -

இரண்டு போராளிகளும் முஸ்லிம் பகுதிக்குச் சென்றபோது மாலை 4 மணிவரை அவர்களின் கையடக்கத் தொலைபேசியுடனான தொடர்பு இருந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் கடல் நீரேரி பகுதியில் விமானம் எரிந்து வீழ்ந்ததா?

கொழும்பு—

புத்தளத்தில் நேற்றுக்காலை விமானம் ஒன்று வானத்திலிருந்து எரிந்தபடி வீழ்ந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து 140 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலந்தையடி கடல் நீரேரி பகுதியில் இந்த விமானம் வீழ்ந்ததாகக் கூறப்பட்டபோதிலும், விமானப்படையினரது விமானமோ அல்லது ஹெலிகொப்டரோ எதுவும் காணாமற் போகவில்லை என விமானப்படையின் பேச்சாளர் அஜந்த டி சில்வா தெரிவித்தார்.

எரிந்து விழுந்தது விமானமா அல்லது ஹெலியா என்பது குறித்தும் தெரியவரவில்லை. சம்பவ இடத்துக்கு விமானப்படையும், கடற்படையும் விரைந்து தேடுதல் நடத்தினர்.

அதேநேரத்தில் விமானம் ஒன்று எரிந்து வீழ்ந்ததை நேரில் பார்த்ததாக அந்தப் பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, விமானம் விழுந்து எரிந்தது தொடர்பாக எவ்வித தடயங்களையும் தாம் காணவில்லையென கடற்படைப் பேச்சாளர் ஜயந்த பெரேரா தெரிவித்தார்.

விமானம் எரிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்படும் கடற்கரைப் பகுதிக்கு நான்கு கடற்படைப் படகுகள் சென்றன. ஆனால் அங்கு விமானம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## முகவர்களுக்கு மக்கள்படை எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்—

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் முகவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் தேர்தல் தினத்தன்று கடமைக்குச் செல்லவேண்டாம் என மக்கள் படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

'தேர்தல் நாள் எச்சரிக்கை' என்ற தலைப் பில் குடாநாட்டில் நேற்று விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியினால் தேர்தல் முகவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் கடமைக்குச் செல்வதை நிறுத்த வேண்டும் என்றும், (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஒற்றையாட்சி, பௌத்த மதத்தை பாதுகாக்கும் வேட்பாளரை ஆதரிக்க 4 மகாநாயக்கர்கள் வேண்டுகோள்!

கொழும்பு—

ஒற்றையாட்சியையும், அடிப்படைவாதிகளிடமிருந்து புத்த மதத்தையும் பாதுகாக்கும் வேட்பாளருக்கு மக்கள் தமது வாக்குகளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கவேண்டுமென நான்கு பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அஸ்கிரிய பீடாதிபதி வண.வரக்காவே தம்மாலோக நாயக்கதேரர், மல்வத்தை பீடாதிபதி வண.வல்கோவகொட விமலபுத்தி நாயக்க தேரர், அமரபுர பீடாதிபதி வண.கொட்டுகொட தம்மவாச அனுநாயக்க தேரர் மற்றும் வண. யட்டகல தம்மபால அனுநாயக்க தேரர் ஆகியோரின் செயலாளர்களால் கையொப்பமிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கையிலுள்ள சிங்கள சனத்தொகை பாதுகாக்கப்படவேண்டும். மற்றும் சுமார் 2500 வருடங்களாக பாதுகாக்கப்பட்டுவரும் புத்தமதம் எவ்வித தீங்குமின்றி பாதுகாக்கப்படவேண்டும்.

இலங்கையில் பல்வேறு பிரச்சினைகள் உண்டென்பதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதில் முதலாவது இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் பயங்கர (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி உறுப்பினர் துப்பாக்கிச்சூட்டில் காயம்

யாழ்ப்பாணம்—

ஊர்காவற்துறைப் பகுதியில் நேற்று நண்பகல் 1 மணியளவில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஊர்காவற்துறையைச் சேர்ந்த ஏ.குமார் (வயது 34) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரை கைத்துப்பாக்கியால் சுட்டு விட்டு தப்பி சென்றதாகவும், கழுத்துப் பகுதியில் பலத்த காயமடைந்த இவர் (12 ஆம் பக்கம் பார்க்க)



ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# தமிழ் மக்களின் உரிமைக்கு எதிரானவர்கள் போட்டியிடும் தேர்தலைப் புறக்கணிப்போம்

## வவுனியா வளாக தமிழ் மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம் —

தமிழர்களின் தாயக விடுதலை தொடர்பாகவோ, நாட்டின் முழு அபிவிருத்தி தொடர்பாகவோ எந்த வித அக்கறையுமின்றி அதிகார வல்லமையையும், ஆட்சிபீட வெறியையும் கொண்டே தேர்தலில் இரு பிரதான கட்சிகளும் போட்டியிடுகின்றன என யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்குமாறு கோரி வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமது தாயகம் விடுதலையை நோக்கி வீறுநடை போடுகின்ற இந்தக் காலகட்டத்தில் மக்கள் யாவரும் புரட் சிக்கும், மலர்ச்சிக்கும் தயாராகிக் கொண்டிருக்கும் இந்தவேளை -ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களுக்கு ஒரு பூச்சாண்டி விளையாட்டு.

தமிழர்களுக்கு ஒரு தலைவர், தமிழர்களுக்கு ஒரு தாயகம், தமிழர்களுக்கு ஓர் நடைமுறை அரசு - நடைபெறுகின்ற இவ்வேளையில், தென்னிலங்கை ஆட்சிபீடம் பற்றி மக்களாகிய நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. யார் ஆட்சிபீடமேறினாலும், அதனால் எமக்கு எவ்வித விடிவும் கிடைக்கப்போவதில்லை.

எனவே, தாயக விடுதலையை வென்றெடுக்க தயாராக உள்ள நாம், தேர்தல் நாடகத்தில் எம்மை நாசப்படுத்தாது முழுமையாகத் தேர்தலைப் பகிஷ்கரிப்போம்.

தேர்தலுக்காகக் கூட்டுச் சேர்ந்தவர்கள் யாவரும் தமிழருக்கும், தமிழர் தேசத்துக்கும், தாயக விடுதலைக்கும், சுயநிர்ணய உரிமைக்கும், தன்னாட்சி அதிகாரத்துக்கும் எதிரானவர்கள். இவர்கள் எமது எதிரிகள் என்பதை நாம் சரியாகப் புரிந்து கொண்டு இந்த ஜனாதிபதித் தேர்தல் நாளை முழுமையாகப் பகிஷ்கரிப்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

# பிரதி கல்விப் பணிப்பாளர்களுக்கு இருநாள் பயிற்சிக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு அலுவலகத்துக்கு உட்பட்ட கல்வி வலயத்தின் அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு இரு நாள் கருத்தமர்வு எதிர்வரும் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் திருகோணமலை கல்வி அமைச்சு அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தமர்வில் - புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி வழங்குதல் தொடர்பான கருத்தமர்வே நடைபெறவுள்ளதால், அனைவரையும் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

## யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில்

# குருநகர் பகுதியில் பரீட்சார்த்தமாக திண்மக் கழிவகற்றல் விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம் —

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட குருநகர் பகுதியில் பரீட்சார்த்தமாக வீடு வீடாகச் சென்று திண்மக்கழிவகற்றல் பற்றிய அறிவூட்டல் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

கடற்கரைவீதி, ஜஸ்பிளாற் வீதி, றெக்கிளமேசன் வீதி மற்றும் கடற்கரையை அண்டிய பிரதேசங்களை உள்ளடக்கிய ஜே/69 இலக்க கிராம சேவையாளர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி செயல்முறையில் ஐந்து குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன.

ஒவ்வொரு குழுவும் பொது சுகாதாரப் பரிசோதகர் தலைமையில், சுகாதாரப் பாதுகாவலர், குடும்ப நல உதவியாளர், சுகாதார மேற்பார்வையாளர் மற்றும் சுகாதாரத் தொண்டர் களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டு வீட்டுத்தரிசிப்பு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்த வீட்டுத்தரிசிப்பின்போது- ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் அடிப்படைச் சுகாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல தரவுகள் அடங்கிய வினாக்கொத்து மூலம் சேகரிக்கப்படுவதோடு, சாத்தியமான சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளும் காணப்பட்டு வருகின்றன.

கழிவகற்றல் பற்றிய அறிவுரைகள், கழிவுகளை வீதியில் போடுவதால் ஏற்படும் தீமைகள் பற்றியும் அதனால் ஏற்படக்கூடிய நோய்கள் பற்றியும் விளக்கமளிக்கப்படுகின்றன.

அழுகக்கூடிய கழிவுகளை வேறாகவும், அழுகாத, உக்காத கழிவுகளை வேறாகவும் உரப்பைகளில் சேகரித்து வைத்து மாநகரசபை வாகனங்களில் அவற்றை ஒப்படைக்கும்படியும், எரிக்கப்படாத கழிவுப்பொருட்களான பொலித்தீன், பிளாஸ்டிக் போன்றவற்றை மேற்குறிப்பிட்ட விதத்தில் ஒப்படைக்கும்படியும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்பத் தலைவியும் அவரது வீடு, குடும்பம் ஆகியவற்றின் சுகத்துக்கு அவரே பொறுப்பு என்ற தொனிப்பொருளில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு குழுவும் சராசரியாக ஒரு வீட்டுக்கு 20 நிமிடம் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு ஆறு முதல் பத்து வீடுகளைத் தரிசித்து வருகின்றது. பெரும்பாலான வீடுகளில் பல குடும்பங்கள் வசித்து வருவதனால் நேர தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி குழுவினது ஆரம்ப நடவடிக்கையான வீட்டுத்தரிசிப்பு நிறைவு பெற்றதும் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் பட்டியல்படுத்தப்பட்டு அவற்றை விரைவாகத் தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# பரமானந்த ஆச்சிரம முதியோர்கள் சுற்றுலா!

வடமராட்சி —

வதிரி பரமானந்த ஆச்சிரமதித்லுள்ள முதியோர்கள், சிறார்கள் யாழ். மாவட்டத்திலுள்ள திருத்தலங்களை தரிசிப்பதற்காக ஒரு சுற்றுலா ஒன்றை பருத்தித்துறை வர்த்தகர்கள், வங்கிகள், வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டனர்.

ஆச்சிரமத்திலிருந்து செயலாளர் அரிபிரசாதத்தால் ஆரம் பித்துவைக்கப்பட்ட இந்தச் சுற்றுலாவில்- முதலில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு சென்ற முதியோர்கள் -

அங்கு தரிசனம் செய்து விட்டுப் பின்னர், அங்கிருந்து செல்வச்சந்நிதி ஆலயம், காரைநகர் சிவன்கோவில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆகிய ஆலயங்களை தரிசித்துவிட்டு மாலை ஆச்சிரமத்தை வந்தடைந்தனர்.

இந்தச் சுற்றுலாவுக்கு பருத்தித்துறை பிரபல வர்த்தகர் சி.பத்மநாதன் இணைப்பாளராக இருந்து சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டார். (17)

## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிறுவனம் நடத்தும் மகளிர் தின நிகழ்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்வில் - சிறப்பு சொற்பொழிவினை கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வின்போது- சாயி சேவா நிலையம் நடத்திய தையல் பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரணவாய்தெற்கு மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் பாணுரூபன் (வயது 23) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். நேற்றுமாலை 3.30 மணியளவில் கோப்பாய் பூதர்மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது -

யாழ்ப்பாணத்திலிந்து பருத்தித்துறை வீதியூடாகச் சென்றுகொண்டிருந்தபோதே, மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியது.

படுகாயமடைந்த இளைஞன் கோப்பாய் வைத்தியசாலைக்க எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (90)

# மாவிட்டபுரம் மறுமலர்ச்சி மன்றத்தின் பொன்விழா கல்விப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் —

மாவிட்டபுரம் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினதும், மாவை பாரதி சனசமூக நிலையத்தினதும் பொன்விழா கல்விப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் 6 போட்டிகளாக நடைபெற்றது - அதில் மூன்று போட்டிகளில் வெற்றிபெற்றர்வர்களின் விபரங்கள் வருமாறு -

**ஆங்கிலப் பேச்சுப் போட்டி**

**பிரிவு - 1**

முதலாம் இடம் - ஜெயமலர் கொண்சன்ரைன் ஹூட்ஸ் (திருக்குடும்ப கன்னியர்மடம்), இரண்டாம் இடம்- மரின் டிவ்வா மரியதாஸ் (திருக்குடும்பக் கன்னியர் மடம்), மூன்றாம் இடம்- பிரான்ஸிஸ் சேவியர் அஸ்ரோனிஷ் (நவாலி சென்பீற்றர் றோ.க.த), மேரி தெபோரா டொனால்ட் (திருக்குடும்பக் கன்னியர் மடம்), ஜீனா கிறிஸ்ரீனா போல் (திருக்குடும்ப கன்னியர் மடம்)

**பிரிவு - 2**

முதலாம் இடம் - சுஜீபா தவேந்திரன் (மாதகல் சென்.யோசெவ் மகா. வித்தி), இரண்டாம் இடம் -அபிராமி தெய்வநாதன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), மூன்றாம் இடம் - சிவகுமார் நிவேத் (மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரி), நான்காம் இடம் - நடராசா ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), ஐந்தாம் இடம் விசயரத்தினம் நிரூபா (யாழ். இந்துக் கல்லூரி).

**பிரிவு - 3**

முதலாம் இடம் - அனுசியா மகாதேவன் (உடுவில் மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் -சுமங்கலி சிவகுமாரன் (வேம்படி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - துஸ்யந்தா அருந்தவராசா (இளவாலை கன்னியர்மடம் மகா.வித்தி).

**பிரிவு - 4**

முதலாம் இடம் - சாகினி நடராசா (இளவாலை கன்னியர் மகா.வித்தி), இரண்டாம் ஆம் - ராஜினி முருகையா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி), மூன்றாம் இடம் - சோபனா இராசரத்தினம் (பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை).

**கதவிதைப் போட்டி**

**பிரிவு 4**

முதலாம் இடம்- விஜிந்தினி மோகனராசா (மெதடிஸ் பெண்கள் உ.த பாடசாலை), இரண்டாம் இடம்- சாகினி நடராசா (இளவாலை கன்னியர்மடம் மகா.வித்தி), மூன்றாம் இடம்- றோஷனி ஜெயராஸ் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

**பிரிவு - 5**

முதலாம் இடம் - கதிரவேலு யோகேஸ்வரன் (மெமோறியல் நவோதயாக் கல்லூரி), இரண்டாம் இடம் - நடராசா கண்ணதாஸ் (மத்திய கல்லூரி), சிவகுமார் சிவரூபன் (சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வித்தி)

**தமிழ் பேச்சுப் போட்டி**

**பிரிவு - 1**

முதலாம் இடம் - சியாமிளா சற்குணராசா (கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை), இரண்டாம் இடம் பாலசிங்கம் கஜானன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), மூன்றாம் இடம் காமலின் அருள்தாசன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), நான்காம் இடம் - சிவகுமார் சிவதர்சன் (மத்திய கல்லூரி), ஐந்தாம் இடம் - சுகன்யா சகாயநாதன் (திருக்குடும்ப கன்னியர்மடம்),

**பிரிவு -2**

முதலாம் இடம் - ஆன் பிரவீனா தியடோர் (திருக்குடும்ப கன்னியர் மடம்), இரண்டாம் இடம் - தஸ்மினி வரதராஜா (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), மூன்றாம்- இடம் சிவகுமார் நிவேத் (மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரி) நான்காம் இடம் - நடராசா ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), ஐந்தாம் இடம் கேமதட்சணி சௌந்தரராஜன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

**பிரிவு - 3**

முதலாம் இடம் - ஆன் மரீனா தியடோர் (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் சுமங்கலி சிவகுமாரன் (வேம்படி மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - தர்சா வரதராஜா (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்).

**பிரிவு - 4**

முதலாம் இடம் - சாகினி நடராசா (இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம்- தர்மராஜா நிர்மல்ராஜ் (மத்திய கல்லூரி), மூன்றாம் இடம் - நிரோஜா சத்திவேல் (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி).

**பிரிவு - 5**

முதலாம் இடம் - சந்குணராசா நிகேஸ் (யாழ்ப்பாணக் கல்லூரி), இரண்டாம் இடம் - நடராசா கண்ணதாஸ் (யாழ்.மத்தியகல்லூரி), மூன்றாம் இடம் - ரவீந்திரன் சதீஸ் (யாழ். மத்தியகல்லூரி).

ஏனைய போட்டிகளில் வெற்றி பெற்றோர்களின் விபரங்கள் நடுவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் வெளியிடப்படுவதுடன், வெற்றி பெற்றோர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் பொன்விழா மகாநாட்டில் வழங்கப்படும்.

# ஈச்சமோட்டை கிராம அபிவிருத்திச்சங்கம் நடத்திய பொது அறிவுப் போட்டி முடிவுகள்!

யாழ்ப்பாணம் —

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஈச்சமோட்டை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற பொதுஅறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

ஈச்சமோட்டை கிராம அபிவிருத்தி மகளிர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டி மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டன.

**ஏ பிரிவு - தரம் - 9**

யே.மேரிசீலா - (யாழ்.சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை), யோ.எக்சிபா (யாழ். சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாசாலை).

**தரம் -10**

கு.தமிழ்ச்செல்வி - (யாழ். சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை).

**பி பிரிவு - தரம் - 6**

யோ.ஜொனிஸ்ரா - (யாழ்.சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை).

**தரம் - 7**

வி.துர்ஷாந்தன், அ.ஜீவன் - (யாழ்.சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாட சாலை).

**சி பிரிவு - தரம் - 5**

வ.சுகன்ஜா, க.கொன்சிகா - (யாழ்.சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாட சாலை).

**தரம் -4**

வி.தனபால் - (யாழ்.சென்றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாட சாலை).


ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த
மஜா
காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

சுன்னாகம் நாகம்ஸ்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், ஆர்த்தி அகர்வால், நமீதா, வடிவேலு நடித்த

பம்பரக்கண்ணாலே
காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
3 ஆவது ஜனத்திரல் வாரமாக யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
இளைய தளபதி விஜய் வெடிக்கும்
சிவகாசி
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினவெளியீடு
தனுஷ், பிரியாமணி
அது ஒரு கனாக்காலம்
இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா
காட்சிகள்;-10.30, 2.30,6.30, (புதிய நேரம்)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பார்த்தீபன் வடிவேல் லக்ஷ்மிராய் நடித்த
குண்டக்க மண்டக்க
காட்சிகள் 11.00, 2.45, 6.30 (புதிய நேரம்)

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் வெற்றிடங்கள் நிரப்ப ஏற்பாடு!

கொழும்பு—

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் 11 பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கான வெற்றிடங்கள் விரைவில் நிரப்புவதற்கு பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியுடைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் 55 பேர் அடுத்தமாதம் 9,10,11 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டவர்களில் ஏழுபேர் ஓய்வுபெற்று சென்றவர்களாவர்.

இதனிடையே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் தற்போதுள்ள அங்கத்தவர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# கூட்டணியில் ஒற்றுமை பேண முடியாதவர் நாட்டின் ஒற்றுமையைப்பற்றிப் பேசுகிறார்!

## - மஹிந்த ராஜபக்ஷவைக் கிண்டல் செய்கிறார் ரவி -

கொழும்பு—

தமது கூட்டணியிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவையும், ஜே.வி.பியையும் ஒரே மேடையில் ஒன்றிணைக்க முடியாத மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் ஒற்றுமை குறித்துப்பேசி மக்களை ஏமாற்றுகிறார்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

மஹிந்தவின் கூட்டணியில் இணைந்துள்ள ஜே.வி.பியையும், ஜாதிக ஹெல உறுமயவையும் தமது தேர்தல் மேடையில் கூட ஒன்றிணைக்க முடியாதவர் மஹிந்த.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை ஒழிக்க வேண்டும் என்கிறது ஜே.வி.பி. ஆனால், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி நீடிக்க வேண்டும் என்கிறது ஜாதிக ஹெல உறுமய. மஹிந்த ராஜபக்ஷ என்ன நிலைப்பாட்டை மேற்கொள்ளப்போகிறார்?

எந்த வேட்பாளரையும் விடுதலைப் புலிகள் ஆதரிக்காமல் இருப்பது எதிர்பாராத ஒன்று. விடுதலைப் புலிகளின் முடிவால் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பாதிப்பு ஏற்படாது. அவர் தமிழர்களின் பிரதிநிதி மட்டுமல்ல, அனைத்து சிறுபான்மை இன மக்களின் பிரதிநிதி.



அனைத்து இலங்கையரது ஆதரவுடனேயே ரணில் தேர்ந்தெடுக்கப்படுவார். நாம் அதையே விரும்புகிறோம். ஒரு இனத்தவரது பிரதிநிதியாக இருக்க நாம் விரும்பவில்லை.

சிங்களத் தீவிரவாதிகளின் பிடியில் மஹிந்த ராஜபக்ஷ உள்ளார். எமக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள் மட்டுமல்ல, பெரும்பான்மை சிங்களவர் வாக்குகளும் கிடைக்கும். தமிழ் மக்களும் எங்களுக்குத்தான் வாக்களிப்பார்கள் என ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# ஒற்றையாட்சிமுறை கோட்பாட்டுடன் புலிகளுடன் பேச்சு நடத்த முடியாது!

## மாற்றுக்கொள்கைகளுக்கான மையத் தலைவர்

கொழும்பு—

இலங்கை இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சிக் கோட்பாட்டை வலியுறுத்திக்கொண்டே புலிகளுடன் பேச்சு நடத்தமுடியாது என தாம் கருதுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் ஏ.பி.சி. தொலைக்காட்சியில் கடந்த வெள்ளிக்கிழமை ஒளிபரப்பாகிய ஏசியா பசுபிக் போக்கஸ் நிகழ்ச்சியில் அவர் கருத்து வெளியிடுகையில் -

ஜனாதிபதித் தேர்தலில் இரு பிரதான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மக்களது வாழ்க்கைச் செலவீனம் மற்றும் அமைதி முயற்சிகள் தொடர்பாகவே இந்தத் தேர்தலில் பிரதானமாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டின்கீழ் கூட்டாட்சி முறையில் தீர்வுகாண்பதாக எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவும், ஒற்றையாட்சிக் கோட்பாட்டின்கீழ் தீர்வு காணப் போவதாக மகிந்த ராஜபக்ஷவும் கூறிவருகின்றனர்.

ஜனாதிபதியாக ரணில் தெரிவு செய்யப்பட்டால் நாடாளுமன்றத்தை விரைவில் கலைத்து விடுவார். நாடாளுமன்றில் தனது கட்சி பெரும்பான்மையுடன் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடும்.

கடந்த பத்து ஆண்டுகளில் இனப்பிரச்சினைக்கு கூட்டாட்சி முறையிலான தீர்வை நோக்கி இரு பிரதான கட்சிகளும் நகர்ந்துள்ளன. ஆனால், சிங்களத் தீவிரவாதிகளின் நிலைப்பாட்டைவிட மகிந்த ராஜபக்ஷவின் இனவாத நிலைப்பாடு உள்ளது.

ஒற்றையாட்சி கோட்பாட்டு முறையை வலியுறுத்திவரும் மகிந்த ராஜபக்ஷவால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தமுடியாதென்றே எண்ணுகிறேன்.

அனைத்துத் தேர்தலிலும் சிறுபான்மையின மக்கள் ரணில் விக்கிரமசிங்கவைத்தான் ஆதரித்தார்கள். இப்போது அந்த நிலைப்பாடு மாறுவதற்கான காரணம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒற்றையாட்சிக் கோட்பாட்டைக் கைவிட்டு கூட்டாட்சி முறையிலான தீர்வைக் காண வேண்டுமென்று முதலில் வலியுறுத்தியவர் சந்திரிகா குமாரதுங்கதான். ஆனால், அவரால் இது விடயத்தில் எதுவித தீர்வையும் ஏற்படுத்த இயலவில்லை.

எதிர்க்கட்சித்தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில்தான் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. ரணில் ஆட்சியைக் கலைத்து விட்டு பேரினவாத ஜே.வி.பியை தமது அரசில் பங்கேற்கச் செய்தவர் சந்திரிகா குமாரதுங்க.

அவர் அளித்திருந்த வாக்குறுதிகள் அனைத்தையும் செயற்படுத்தாதவர் என்ற விமர்சனத்துக்கு இந்தச் செயற்பாடு இடம் கொடுத்தது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சேவைக்கால அடிப்படையில் அதிபர்களுக்கு பதவி உயர்வு!

கொழும்பு—

பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களின் தகைமை மற்றும் சேவைக்கால அடிப்படையில் அதிபர்களுக்குப் பதவி உயர்வுகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி அதிபர் சேவையில் மூன்றாம் வகுப்பில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு அதிபர் சேவை இரண்டாம் வகுப்பின் இரண்டாம் தரத்துக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்தார்.

அதிபர் சேவை மூன்றாம் வகுப்பில் மூன்று வருட கால சேவைக் காலத்தையும், உரிய சம்பளப்படி உயர்வுகளையும் பெற்றுப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுக்காக விண்ணப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.


முதற்கட்டமாக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பதவி உயர்வுக்குத் தகுதியான அதிபர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களைவிட கூடுதல் எண்ணிக்கையான அதிபர்கள் பதவி உயர்வுக்குத் தேவையான தகைமைகளைக் கொண்டிருப்பின் போட்டிப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பதவி உயர்வுளைப் பெற விரும்பும் அதிபர்கள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை வலயக் கல்விப்பணிப்பாளரினூடாக கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் கேட்டுள்ளார்.

# அரசாங்க ஊடகங்கள் எதுவும் இலங்கைக்கு தேவையில்லை!

## தேர்தல் ஆணையாளர்



கொழும்பு—

இலங்கையில் அரச ஊடக நிறுவனங்கள் எதுவும் தேவையில்லை என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அரச மற்றும் தனியார் ஊடகங்கள் பக்கச்சார்பற்ற முறையில் செயற்படவேண்டும். இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளில் சுயாதீனமாக செயற்படக்கூடிய பி.பி.சி போன்ற ஊடகங்கள்தான் தேவை.

அரச ஊடகமானது பக்கச்சார்பாக நடந்துகொள்வதாக கருதப்பட்டால் அது குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

கம்யூனிஸ நாட்டுக்கோ, சர்வதிகார நாட்டுக்கோ அரச ஊடகம் பொருத்தமானதாக இருக்கலாம்.

ஆனால், இலங்கைக்கு தேவையில்லை. கொத்தணி வாக்குச் சாவடிகள் தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்த இரு வேட்பாளர்களும் எமது வழிகாட்டுதல்களை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல, நாடு முழுமைக்குமே நீதியானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொத்தணி வாக்குச் சாவடிகளில் மட்டுமல்லாது அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் சந்தேகத்துக்குரிய வாக்காளர்களின் அடையாள அட்டைகள் கடுமையாக சோதிக்கப்படும்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல்களில் வேட்பாளர்களின் வைப்பு தொகையானது ரூபா 50 ஆயிரத்திலிருந்து 50 இலட்சமாக உயர்த்தப்படும் என தயானந்த திஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

# வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு செல்வதற்கு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்குத் தடை!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் வாக்குகளை எண்ணும் மத்திய நிலையங்களுக்கு செல்வது முற்றிலுமாக தடைசெய்யப்பட்டுள்ளது.

எனினும், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவின் அழைப்பின்பேரில் வருகை தந்துள்ள வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வாக்குகள் எண்ணும்வேளை மத்திய நிலையங்களுக்கு உட்செல்வற்கும், வாக்குகள் எண்ணப்படுவதைக் கண்காணிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களில் ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாய அமைப்பு மற்றும் ஆசிய வலய தேர்தல் கண்காணிப்பாளர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கியுள்ளனர்.

வாக்குகளை எண்ணும் மத்திய நிலையங்களுக்குக் கடும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுவருவதுடன் இந்த நிலையங்களுக்குள் செல்பவர்களும் கடும் சோதனைக்குட்படுத்தப்படுவர்.

வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகிய பின்னர் எந்தவொரு தேர்தல் பிரதிநியும் வாக்குகள் எண்ணும் நிலையத்திலிருந்து வெளிச்செல்வதை தவிர்க்குமாறும், அவ்வாறு யாராவது வெளியே சென்று வருவாராயின் அவரை கடும் சோதனைக்குட்படுத்துமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(தே)

# 2 ஆயிரம் வாக்காளர் அட்டைகளுடன் ஐ.தே.க உறுப்பினரொருவர் கைது!

கொழும்பு—

சட்டவிரோத வாக்காளர் அட்டைகள் 2 ஆயிரத்தை எடுத்துச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை சிலாபம் பொலிஸார் கைதுசெய்தனர்.

ஐக்கிய தேசியக் கடசியின் ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் 2 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்காளர் அட்டைகளை எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்களிக்கவேண்டும் என்பது குறித்து தனது ஆதரவாளர்களுக்கு விளக்கமளிப்பதற்காகவே தான் அவ்வாறு வாக்காளர்கள் அட்டைகளை எடுத்துச்சென்றதாகவும் -அந்தப் பிரதேச சபை உறுப்பினர் கூறியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் சிலாபம் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

# லங்காதீப காட்டூனிஸ்ட் ஜே.வி.பியால் தாக்கப்பட்டார்!

கொழும்பு—

ஜே.வி.பியால் லங்காதீப பத்திரிகை கார்டூனிஸ்ட் தசஹப்புவில கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தாக்கப்பட்டார்.

நிட்டம்புவவில் உள்ள தமது வதிவிடத்தில் இருந்தபோதே இவர் தாக்கப்பட்டதாக தெரியவருகிறது. இந்தத் தாக்குதலுடன் ஜே.வி.பியினரே தொடர்புபட்டிருப்பதாக தமக்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

லங்காதீப பத்திரிகையில் கடந்த சில வாரங்களாக ஹப்புவில ஜே.வி.பியினரை கடுமையாக விமர்சனம் செய்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நியமனக் கடிதம் அற்ற பிரதிநிதிகள் எவரையும் வாக்களிப்பு நிலையத்துக்கு அனுமதிப்பதில்லை

கொழும்பு—

மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற பிரதிநிதி ஒருவரால் வழங்கப்பட்ட நியமனக் கடிதமின்றி எந்தவொரு கட்சியின் பிரதிநிதியையும் வாக்களிப்பு நிலையத்துக்குள் அனுமதிக்கவேண்டாமென - தேர்தல் ஆணையார் தயானந்த திஸநாயக்க, அனைத்து வாக்களிப்பு நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு இரண்டு பிரதிநிதிகளை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் பிரதிநிதிகளின் பெயர்கள் முன்னரேயே மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் அனைத்து வேட்பாளர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானுடனான முதல் டெஸ்ட்; வெற்றியை நோக்கி இங்கிலாந்து!



முல்டான் —

முல்டானில் இடம்பெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 198 ஓட்டங்களை எடுத்தால் வெற்றிபெறலாமென்ற நிலையிலுள்ளது.

மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் பாகிஸ்தான் தனது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்று ஆட்டம் தொடங்கியதும், சல்மான் பட் மற்றும் மொகட் சமி ஜோடி களமிறங்கியது. எனினும், அணி மேலதிகமாக 6 ஓட்டங்களை எடுத்தநிலையில் மொகமட் சமி 3 ஓட்டங்களுடன் பிளின்ரொப்பின் பந்தில் ஜோன்ஸிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்பினார்.

இதன்பின் சல்மான் பட்டுடன் இன்ஸமாம் உல்-ஹக் இணைந்தார். இவர்கள் இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இந்த ஜோடியை இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் பிரிப்பதற்கு பெரும் சிரமப்பட்டனர். இறுதியில் அணி 266 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 147 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 72 ஓட்டங்களைப் பெற்றிருந்த இன்ஸமாம் உல்-ஹக், ஹொகாட்டின் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆகி வெளியேறினார்.

இதனையடுத்து சல்மான் பட்டுடன் இணைந்தவர்கள் எவரும் சோபிக்கவில்லை. இதில் மொகமட் யூசுப் 16, ஹசன் ராசா 1 என ஆட்டமிழக்க மறுமுனையில் சல்மான் பட்டுடன் கம்ரன் அக்மல் இணைந்தார். ஆனால், 256 பந்துகளில் 12 பவுண்



டரிகள் அடங்கலாக 122 ஓட்டங்களைப் பெற்றிருந்த சல்மான் பட் ஆட்டமிழந்தார். இதன்பின் வந்தவர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினர்.

இதில் அக்தர் 11, சபீர் அகமட் 0, இறுதியாக கம்ரன் அக்மல் 33 என ஆட்டமிழக்க பாகிஸ்தான் 105.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 341 ஓட்டங்களை இரண்டாவது இனிங்ஸில் பெற்றது.

பந்துவீச்சில் பிளின்ரொப் 4, ஹர்மிசன் 3, ஹொகாட் 2, ஜைல்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 198 ஓட்டங்களை



எடுத்தால் வெற்றியென்ற நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய ஆட்டநேரமுடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 24 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் ட்ரெஸ்கொதிக் 5 ஓட்டங்களுடன் சபீர் அகமட்டின் பந்து வீச்சில் போல்டானார். ஸ்ரரஸ் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். இன்று ஆட்டத்தின் கடைசி நாளாகும்.

விளையாட்டு

# சர்வதேச பெண்கள் ரெனிஸில் மௌரிஸ்மோ சம்பியனானார்!



லொஸ் ஏஞ்சல்ஸ் —

அமெரிக்காவில் நடந்த சர்வதேச பெண்கள் ரெனிஸ் போட்டியில் பிரான்ஸ் வீராங்கனை அமலி மௌரிஸ்மோ, சக நாட்டு வீராங்கனை மேரி பியர்ஸை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

உலகின் முன்னணி வீராங்கனைகள் 8 பேர் பங்கேற்ற ரவுண்ட் ரொபின் லீக் சர்வதேச பெண்கள் ரெனிஸ் போட்டி அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்தது.

இதன் இறுதிப் போட்டியில் 4ஆம் நிலை வீராங்கனை அமலி மௌரிஸ்மோ (பிரான்ஸ்), சக நாட்டு வீராங்கனை மேரி பியர்ஸை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டை மேரி பியர்ஸ் தனதாக்கினார். பின்னர் மௌரிஸ்மோ ஆக்ரோஷமாக ஆடினார். இதனால் ஆட்டத்தில் கடும் போட்டி நிலவியது. இதில் பதட்டம் கண்ட மேரி பியர்ஸ் ஆட்டத்தில் பல தவறுகளைச் செய்தார். எனவே மௌரிஸ்மோவின் கை ஓங்கியது.

முடிவில் அமலி மௌரிஸ்மோ 5-7, 7-6 (7-3), 6-4 என்ற செட் கணக்கில் மேரி பியர்ஸைத் தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் மௌரிஸ்மோ உலகத் தரவரிசையில் 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். மேரி பியர்ஸ் 5ஆவது இடத்தில் உள்ளார். டேவன் போர்ட் (அமெரிக்கா), கிம் கிளைஸ்டர்ஸ் (பெல்ஜியம்) ஆகியோர் முறையே முதல் 2 இடங்களை வகிக்கின்றனர். மௌரிஸ்மோ அரையிறுதியில் மரியா ஷரபோவாவை வீழ்த்தி இருந்தார். மேரி பியர்ஸ், டேவன் போர்ட்டை அதிர்ச்சித் தோல்வியடைய வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சாதனைகள் படைத்த கங்கூலிக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை!

## அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்

பரோடா —

உலகில் சிறந்த கிரிக்கெட் வீரர்களில் கங்கூலியும் ஒருவர். அவர் இந்திய ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து இடம்பெறாமல் இருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியிலும் அவர் ஏன் இடம்பெறவில்லை என்பது தெரியவில்லையென - இந்திய கிரிக்கெட் அணியில் கங்கூலி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவது குறித்து இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்க தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது -

கங்கூலி தொடர்ந்து புறக்கணிக்கப்படுவது இந்திய கிரிக்கெட்டில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக எனக்குத் தென்படவில்லை. அவருக்குத் தேர்வுக் குழுவிடம் இருந்தோ அல்லது பயிற்சியாளர் சப்பலிடம் இருந்தோ, டெண்டுல்கர், ஷேவாக் போன்ற ஏதாவது ஒரு வீரரிடம் இருந்தோ ஒரு தொலைபேசி அழைப்புக்கூட வராதது எனக்கு இன்னும் அதிக ஆச்சரியத்தைத் தருகிறது.

வாய்ப்பு அளிக்காததால் கங்கூலிக்கு ஏமாற்றமாக இருக்கலாம். ஆனால், இந்தியா ஒரு ஹீரோவுக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை என்றே நான் கருதுகிறேன். அவர் உலக அளவில் எத்தனையோ அரிய சாதனைகளைப் படைத்தவர். இப்படிப் பட்டவருக்கு இந்தியா மரியாதை அளிக்கத் தவறக்கூடாது.

இந்திய கிரிக்கெட்டில் சில முன்னேற்ற நடவடிக்கைகளை எடுக்கலாம். இது முடிவில்லா பயணமாக இருக்கலாம். ஆனாலும் பழைய விடயங்களை மறந்துவிடக் கூடாது. இந்திய அணிக்கு பல இளம் வீரர்கள் தேவைப்படுகின்றனர். அவர்களுடைய வலுவை வைத்துத் திறமையான அணியை உருவாக்கலாம் என்று நினைக்கலாம்.

ஆனாலும், பழைய வீரர்களும் வேண்டும். அதாவது இருமுனை கத்திபோல பழைய வீரர்கள், புதிய வீரர்களைப் பயன்படுத்துவதே சிறந்ததாக இருக்கமுடியும்.

சிலநேரங்களில் பழைய வீரர்களின் ஆட்டம்தான் கைகொடுக்கும். அதாவது அவர்களுடைய அனுபவம் மிகவும் முக்கியமானது.

புதிய வீரர்களைக் கொண்ட இந்திய அணி இன்னும் வெளிநாடுகளில் விளையாடவில்லை.

அங்கு செல்லும்போது அந்த சூழ்நிலையில் எப்படி ஆடுகிறார்கள் என்பதைப்பார்த்து விட்டுத்தான் அவர்களின் திறமையைக் கணிக்கமுடியும். அந்த இடங்களுக்கு அனுபவம் வாய்ந்த வீரர்கள் தேவைப்படலாம்.

கங்கூலி விக்கெட்டுக்களினிடையே ஓடும் வேகம் குறைவாக இருக்கலாம். பாகிஸ்தான் கப்டன் இன்சமாமை விடவா மோசமாக ஓடுகிறார். அல்லது ஷேவாக்கை விடவா களத்தடுப்பில் மோசமாக இருக்கிறார்.

நல்ல கிரிக்கெட் நிபுணர்களால் நிச்சயம் கங்கூலியின் திறமையைப் புரிந்துகொள்ள முடியும். கங்கூலி இடம்பெற்றிருப்பதே இந்திய அணிக்கு நல்லதாக இருக்கமுடியுமென தெரிவித்துள்ளார்.

# செஸ் சம்பியன் போட்டி மோசடி; பல்கேரிய வீரர்மீது குற்றச்சாட்டு

புடாபெஸ்ட் —


உலக செஸ் போட்டியில் இந்திய வீரர் ஆனந்தை வீழ்த்திய பல்கேரிய கிராண்ட் மாஸ்டர் - ஆட்டத்தில் நூதன முறையில் மோசடி செய்து வெற்றி பெற்றதாக பரபரப்பான புகார் கிளம்பியிருக்கிறது.

விளையாட்டில் என்ன நூதன மோசடி? ஆட்டத்தில் தந்திரமும், மதிநுட்பமும் தானே இருக்கும். மோசடிக்கு எங்கு வழி இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? மூளைக்கு அதிக வேலை கொடுக்கும் செஸ் ஆட்டத்தில் தான் இந்த மோசடி அரங்கேறி இருக்கிறது.

பல்கேரிய கிராண்ட்மாஸ்டர் வாசெலின் தபலோவ், கடந்த மாதம் ஆஜென்ரீனாவில் உள்ள சான் லூயிஸ் நகரில் நடந்த உலக செஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் டை-பிறேக்கரில் இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆனந்தை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். தபலோவ் மோசடியான முறையில் இந்த வெற்றியைப் பெற்றதாக ஹங்கேரியில் ஒரு இணையத்தளத்தில் செய்தி வெளியாகி இருக்கிறது.

ஆனந்துக்கு எதிராக ஒவ்வொரு காய்களை நகர்த்தும் முன்பும் தபலோவ், போட்டியில் பங்கேற்காத ஒருவரிடமிருந்து ரகசியமாக சைகை மூலம் சிக்னல் பெற்று ஆடியதாக போட்டியில் பங்கேற்ற வீரர்களில் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார். தபலோவுக்கு சைகை மூலம் ஆலோசனை வழங்கியவர் போட்டி நடந்த இடத்தில் கணினியின் உதவியுடன் காய்களை நகர்த்துவதற்கு ஏற்ப ஆட்டத்தின் போக்கு எப்படி இருக்கும் என்பதைக் கணித்துச் சொல்லியதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தபலோவ் மீதான இந்த மோசடிக் குற்றச்சாட்டு செஸ் உலகில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# இந்திய கிரிக்கெட் அணியை தலை நிமிரச் செய்தவர் சப்பல்!

## பாராட்டுகிறார் சித்து

ஜலந்தர் —

இந்தியக் கிரிக்கெட் அணியைத் தலைநிமிரச் செய்துள்ளார் பயிற்சியாளர் கிரேக் சப்பல் என முன்னாள் தொடக்க வீரர் நவஜோத் சிங் சித்து பாராட்டியுள்ளார்.


தற்போது கிரிக்கெட் வர்ணனையாளராக இருக்கும் சித்து, நிருபர்களிடம் இது குறித்து கூறியதாவது-

துணிச்சலான முடிவுகளை சப்பல் எடுத்துவருவது மெச்சத்தக்கது. இந்திய அணி தற்சார்பும், தன்னம்பிக்கையும் மிக்க அணியாக விளங்குகிறது. இதற்குப் பயிற்சியாளர் சப்பலும் அவர் சுதந்திரமாக செயல்பட அனுமதி தந்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுமே காரணம்.

முன்பெல்லாம், அதாவது கடந்த 5 அல்லது 6 ஆண்டுகளாக ஓரிரு நட்சத்திர வீரர்களை மட்டுமே நம்பிக்கொண்டிருந்தது இந்திய கிரிக்கெட். இப்போது ஏறக்குறைய 10 துடிப்புள்ள இளம் வீரர்கள் அணியில் உள்ளனர். அதனால் ஓரிரு வீரர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்பட்டு விளையாட்டில் கலந்துகொள்ள முடியவில்லை என்றாலும் அணிக்கு பாதகமில்லை. தற்போது புதுப் பொலிவுடன் விளங்கும் இந்திய அணிக்கு 2007 உலகக் கிண்ணத்தில் நல்ல வாய்ப்பு இருப்பதாக உணர்கிறேன். என்றாலும் உலகக் கிண்ணம் குறித்து இப்போதே நினைப்பது சரியாக இருக்காது.

இப்போது எமது சிந்தனை எல்லாம் தென்னாபிரிக்க அணியுடனான ஒருநாள் தொடரை சமாளிப்பதிலேயே இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய அணியில் மீண்டும் இடம் பிடிப்பாராம் கங்கூலி!



அகமதாபாத் —

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராகவும், கப்டனாகவும் திகழ்ந்தவர் கங்கூலி. மோசமான ஆட்டத்திறன் மற்றும் காயம் காரணமாக இந்திய அணியில் சேர்க்கப்படாமல் இருந்து வருகிறார்.

அவர் துலீப் கிண்ண லீக் ஆட்டங்களில் சிறப்பாக ஆடினார். எனினும், அவர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெறவில்லை. இது அவருக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்த நிலையில் துலீப் கிண்ண இறுதிப் போட்டியில் கங்கூலி தலைமையிலான கிழக்கு மண்டல அணியை மேற்கு மண்டல அணி தோற்கடித்தது. இந்தப் போட்டியில் கங்கூலி இரண்டு இனிங்சிலும் டக் - அவுட் ஆனார். போட்டி முடிவில் கங்கூலி கூறியதாவது-

இந்தப் போட்டி எனக்கு துரதிஷ்டவசமாக அமைந்து விட்டது. இரண்டு இனிங்சிலும் ஓட்டங்கள் எதனையும் பெறவில்லை. ஆனால், கடந்த முதல் தர ஆட்டங்களில் சிறப்பாக ஆடியுள்ளேன். சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்டில் சதம் அடித்துள்ளேன். இந்திய அணியில் விரைவில் இடம்பிடிப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உலக பளுதூக்கும் போட்டியில் சீன, ரஷ்ய வீராங்கனைகள் சாதனை

டோகா —

உலக பளுதூக்கும் சம்பியன்ஷிப் போட்டியில் சீன மற்றும் ரஷ்ய வீராங்கனைகள் உலகசாதனை படைத்தனர்.

கட்டார் தலைநகர் டோகாவில் உலக பளுதூக்கும் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் சீனாவின் லியு சின் ஹோங் மற்றும் ரஷ்யாவின் ஜரிமா கசவோ முறையே 75 கிலோ கிராம் மற்றும் 69 கிலோ கிராம் எடைப் பிரிவில் சாதனை படைத்தனர்.

லியு சின் ஹோங் 285 கிலோ கிராம் எடை தூக்கினார். இதற்கு முன்னர் அவர் தூக்கிய 281 கிலோ கிராம் எடையே சாதனையாக இருந்தது. 69 கிலோ கிராம் எடைப் பிரிவில் ஜரிமா சகவோ-கிளீன் பிரிவில் 157 கிலோ கிராம் எடையும், ஸ்னாட்ச் பிரிவில் 118 கிலோ கிலாம் எடையும் தூக்கி மொத்தமாக 275 கிலோ கிராம் எடையைத் தூக்கி உலக சாதனை ஏற்படுத்தினார்.

இந்தப் பிரிவில் சீன வீராங்கனை லியு ஹைக்சியா 274 கிலோ கிராம் எடை தூக்கி தங்கம் பெறும் வாய்ப்பை நூலிழையில் தவறவிட்டார். ரஷ்யாவின் ஒலிகா கிசிலேவா 250 கிலோ கிராம் தூக்கி வெண்கலப்பதக்கம் வென்றார்.

# 2ஆவது சுற்றுக்கு பெடரர் தகுதி!




சாங்காய் —

சீனாவில் உள்ள சாங்காய் நகரில் மாஸ்டர்ஸ் ரெனிஸ் தொடர் நடைபெறுகிறது. ரவுண்ட் ரொபின் முறையிலான இந்தத் தொடரில் ரெட் குரூப்பில் 4 வீரர்களும், கோல்டன் குரூப்பில் 4 வீரர்களும் பங்கேற்கிறார்கள்.

ரெட் குரூப்பில் உள்ள வீரர்களுக்கான முதல் சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

இதில் முதல் நிலை வீரரான, ரோஜர் பெடரர் 6-3, 2-6, 6-4 என்ற செட் கணக்கில் ஆஜென்ரீனாவின் டேவிட் நல்பாண்டியனை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் - குரோஷியாவின் இவான் ஜூபிசிக் 6-2, 6-3 என்ற செட் கணக்கில் ஆஜென்ரீனாவின் கில்லர்மோ கோரியாவை வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்




## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

### பகுதி - I

01. கேட்ஸ் என்னும் அலகில் அளக்கப்படும் கணியம் பின்வருவனவற்றுள் எது?
i. மீடிறன் ii. வலு iii. ஒலிச்செறிவு iv. அலைநீளம்

2. செப்பு நாகம் என்பவற்றைக் கலப்பதால் கிடைக்கும் கலப்பு உலோகத்தின் பெயர் யாது?
i. மென்னுருக்கு ii. செம்பு iii. பித்தளை iv. டியூரலுமின்

3. பொசுபேற்று உரத்தயாரிப்பிற்கு பயன்படுத்தும் பதார்த்தத்தின் பெயர்
i. தொலமைற்று ii. அப்பறைற்று
iii. சுண்ணாம்பு iv. இல்மனையிற்று

4. Mg அனுவின் அனு எண் 12 திணிவெண் 24 இதில் காணப்படும் நியூத்திரன்களின் எண்ணிக்கை யாது?
i. 12 ii. 24 iii. 36 iv. 38

5. ஒரு மோட்டார் கார் சீரான ஆர்முடுகலுடன் 27 m/s வேகத்திலிருந்து 54 M/s வேகத்தை 10 செக்கனில் அடையுமாயின் அதன் ஆர்முடுகல்
i. 0.5 $ms^{-2}$ ஆக அமையும் ii. 2.0$ms^{-2}$ ஆக அமையும்
iii. 2.7 $ms^{-2}$ ஆக அமையும் iv. 5.4 $ms^{-2}$ ஆக அமையும்

6. நிலத்தில் எறியப்பட்ட இரப்பர் பந்து பாய்ந்து ஓடுவதற்கான காரணமான தன்மை பின்வருவனவற்றுள் எதுவாக அமையும்
i. அதிர்ச்சியை தாங்குதல் ii. இழுக்கக்கூடியதாக இருத்தல்
iii. மீள்தன்மை iv. கடினத்தன்மை

7. பின்வரும் சேர்வைகளில் அயன் பிணைப்பைக் காட்டக் கூடிய சேர்வை எது?
i. $NH_4CL$ ii. $Al_2O_3$ iii. $NH_3$ iv. $C_2H_6$

8. X,Y,Z, ஆகிய மூலங்களை வளியில் நீண்டநேரம் வெப்பமேற்றும் போது கறுப்பு நிற ஒட்சைட்டைத் தருவது Y ஆகும். X என்பது வளியுடன் பிரகாசமான சுவாலையுடன் எரிந்து வெண்ணிறத்தூளைத் தரும் Z வளியில் வெப்பமேற்றும் போது தாக்கமெதனையும் காட்டமாட்டாது. இவற்றின் தாக்கு திறன் ஏறுவரிசைக்கு
i. Y,Z,X ii. Z,Y,X iii. X,Z,Y iv. Y,X,Z


9. றப்பர் பாலைப் பதப்படுத்தும் முறைகளில் மிகத்தூய்மையான றப்பரைப் பெறக்கூடிய முறை
i. சீட்றப்பர் ii. கிறேப்றப்பர்
iii. கட்டிறப்பர் iv. செறிவாக்கப்பட்ட றப்பர்.

10. மது அருந்திய ஒருவர் வீதியின் வழியே தள்ளாடி நடந்து சென்றார். மது காரணமாக அவரது மூளையில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என நீர் கருதும் பகுதி எது?
i. நீள்வளய மையவிளையம் ii. முளையம்
iii. மூளி iv. முண்ணான்.

11. மின்குமிழ் தயாரிக்கப்பயன்படுத்தும் உலோகங்கள் தொடர்பான தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

தரவு 1

| உலோகம் | உருகுநிலை | மின்கடத்தல் |
|---|---|---|
| X | 1080 | $1.7X10^{-8}$ |
| Y | 3400 | $5.5X10^{-8}$ |
| Z | 327.5 | $20.8X10^{-8}$ |




தரவு II

இழையை தயாரிப்பதற்கு தேர்ந்தெடுக்கும் உலோகம் உயர் வெப்பநிலையைத் தாங்கக் கூடியதாகும். உயர் தடைப்பெறுமானத்தை கொண்டிருத்தலும் வேண்டும்.

இந்தத் தரவுகளில் இருந்து XYZ எனும் உலோகங்களின் ஒழுங்கு முறையே
i. செம்பு, தங்குதன், ஈயம் ii. செம்பு, ஈயம், தங்குதன்
iii. ஈயம், செம்பு, தங்குதன் iv. தங்குதன், ஈயம், செம்பு

12. சிறு குடலில் அகத்துறிஞ்சப்படும் குளுக்கோசு மூலக்கூறு இதயத்தை சென்றடையும் பாதையை ஒழுங்காக குறிப்பது பின்வருவனவற்றுள் எது?
i. சிறுகுடல் → ஈரல் → ஈரல்வாயிநாளம் → ஈரல்நாடி → பிற்பெருநாளம் → இதயம்
ii. சிறுகுடல் → ஈரல்நாளம் → ஈரல் → ஈரல்நாடி → பிற்பெருநாடி
iii. சிறுகுடல் → ஈரல்வாயிநாளம் → ஈரல் → ஈரல்நாளம் → பிற்பெருநாளம்
iv. சிறுகுடல் → ஈரல் → ஈரல்நாளம் → பிற்பெருநாளம் → இதயம்

13. அங்கிக் கலங்கள் அனைத்திலும் காணப்படும் முக்கிய கூறுகள் எவை?
i. இழைமணி, கரு, கலச்சுவர் ii. கலச்சுவர், பச்சையவுருமணி, இழைமணி
iii. கரு, இழைமணி, கலமென்சவ்வு
iv. குழியவுரு, பச்சையவுருமணி, புன்வெற்றிடம்.


14. X எனும் மூலகம் ஒட்சிசனுடன் தாக்கத்தில் ஈடுபட்டு உருவாகும் சேர்வையின் சூத்திரம் $X_2O_3$ ஆகும். X இன் இலத்திரன் நிலையமைப்பாக இருக்கக்கூடியது யாது?
i. 2,8 ii. 2,8,1 iii. 2,8,2 iv. 2,8,3

15. 256Hz மீடிறனுடைய இசைக்கவர் ஒன்று இசைக்கப்பட்டது. வளியில் ஒளியின் வேகம் 330ms-1 எனின் உண்டாக்கப்பட்ட ஒலியின் அலை நீளம் யாது?
i. $\frac{256}{330x100}$ m ii. $\frac{330}{256}$ m iii. $\frac{330X100}{256}$ m iv. 256X330m

16. பாரம்பரியமாக கடத்தப்படும் நோய்க்கு உதாரணமாக அமைவது
i. மலேரியா ii. எயிட்ஸ் iii. இளம்பிள்ளைவாதம் iv. வெளிறல்


17. இழைக்கருவி ஒன்றை அதிரச்செய்யும் போது பிறப்பிக்கப்படும் நாதத்தின் சுருதி அதிகரிப்பது
A. இழையின் நீளம் குறைக்கும் போது
B. இழையின் இழுவை அதிகரிக்கும் போது
C. இழையின் தடிப்பு அதிகரிக்கும் போது இந்தக் கூற்றுக்களில் சரியானது
i. A,B ii. B,C iii. A,C iv. A,B,C

18. ஒரு பூச்சி A எனும் புள்ளியிலிருந்து தனது பயணத்தை ஆரம்பித்து 7 cm ஆரையைக் கொண்ட வட்டவடிவப்பாதையின் வழியே மீண்டும் புள்ளி Aஐ அடைகின்றது. மேற்படி இயக்கத்தின் போது பூச்சி பயணஞ்செய்த தூரம் அதன் இடப்பெயர்ச்சியின் பருமன் என்பன சதம் மீற்றரில் முறையே
i. 2x22x 7 ம் O ம ஆகும்.
ii. 2x7ம் O ம் ஆகும்
iii. 2x22 / 7 ம் 2x7 ம் ஆகும்
iv. O ம் 2 x 7 ம் ஆகும்




மேற்படி சுற்றில் A,B இற்கு இடையேயான சமானத்தடை யாது?
i. 1Ω ii. 3Ω ii. 9Ω iv, 17.Ω


20. P,cl,Si என்பன அறை வெப்பநிலையில் காணப்படும் நிலைகள் முறையே




i. வாயு, திண்மம், வாயு ஆகும்
ii. வாயு, திண்மம், திண்மம் ஆகும்
iii. திண்மம், திண்மம், வாயு ஆகும்
iv. திண்மம், வாயு, திண்மம் ஆகும்


21. 240 V மின் வழங்களுடன் இணைக்கப்பட்ட மின் குமிழினூடாக 0.3A மின்னோட்டம் 6 நிமிடத்தில் பாய்ந்தது பிறப்பிக்கப்பட்ட வெப்பக்கணியம் யாது?
i. $\frac{240}{0.3X360}$ J ii. $\frac{360X0.3}{240}$ J iii. $\frac{240X0.3}{360}$ J iv. 240X03X360 J

22. நன்னீர்க்குளச்சாகியம் ஒன்றில் நஞ்சு கலக்கப்பட்டதன் காரணமாக தாவர உண்ணிகளின் குடித்தொகையின் ஏற்படக் கூடிய மாற்றத்தை சரியாக காட்டும் வரைபு பின்வருவனவற்றுள் எது?





i. ii. iii. iv.

23. படத்தில் காட்டியவாறு சம அளவான Mg நாடாத்துண்டுகள் சம அளவு நீரில் ஒரே நேரத்தில் இடப்பட்டு அவதானிக்கப்பட்டது எந்தச் சோதனைக் குழாயிலிருந்து முதலில் வாயுக்குமிழிகள் வெளியேறத் தொடங்கும்.




i. A ii. B iii. C iv. ABC மூன்றிலும் ஒரேநேரம்

24. 25 ம் வினாக்களுக்கு இந்தப் படத்தை உபயோகித்து விடையளிக்க.




24. படத்தில் தெறிவில்லையின் மாதிரியமைப்பு காட்டப்பட்டுள்ளது. இதில் M எனும் பகுதிகுறிப்பது.
i. கண்தசையாகும் ii. கைத்தசையாகும்
iii. தோல் iv. மூளையின் பகுதியாகும்

25. படத்தில் காட்டப்பட்ட தெறிவினைச் செயற்பாட்டில் கணத்தாக்கம் நடத்தப்படும் பாதை எது வாகும்.
i. ABCEM ii. ABDEM iii. MEDBA iv. MECBA

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சா/த) பரீட்சை -2005 மாதிரி வினாத்தாள்

## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

### பகுதி - II

(01) மனித நாகரிகத்தின் ஆரம்ப காலத்தைக் கற்காலம் என்பர். கற்கால மனிதன் தனக்குத் தேவையான கருவிகளையும், ஆயுதங்களையும் தயாரிக்கக் கற்களையே பயன்படுத்தினான். தனது தேவைக்கேற்ப பொருத்தமான வடிவத்தையும், திணிவையும் கொண்ட கற்றுண்டுகளை இதற்கென அவன் தேர்ந்தெடுத்தான். பின்வந்த யுகங்களில் வாழ்ந்த மனிதன் தனது தேவைக்கேற்ப வேறு பல திரவியங்களையும் கையாளப் பயின்றான். இதனால் புதிய கைத்தொழில்கள் உருவாகின. புவியிலிருந்து பெறும் வளங்களை நேரடியாகவோ வேறு பொருட்களாகவோ மாற்றிப் பயன்படுத்திய போது புதிய கைத்தொழில்கள் உருவாயின.


புவியிலிருந்து பெறக்கூடிய பயன்மிகு பொருட்களில் காரீயம், இரத்தினக்கல், களிய மணல், அப்பறைற்று ஆகியவையாகும். இரத்தினக்கல் புவியிலிருந்து பெறும் விலைமிகுந்த வளமாகும். இரத்தினக்கற்களில் காணப்படும் அழகு, வன்மை, அருமையாயிருத்தல் போன்ற பண்புகள் காரணமாக இரத்தினக்கற்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. நிலத்திலிருந்து பெறும் இரத்தினக்கற்கள் கரு நிறமாகவிருக்கும். அவற்றின் மேற்பரப்பை வெவ்வேறு தளங்களில் வெட்டித் திட்டுவதன் மூலம் அவை பிரகாசத்தைப் பெறும். இரத்தினக்கற்களுள் காணப்படும் உலோகச் சேர்வைகள் காரணமாக அவை நிறத்தைப் பெறுகின்றன.

1. பந்தியில் குறிப்பிட்ட, புவியிலிருந்து பெறப்படும் வளங்கள் எவை?
2. பந்தியில் குறிப்பிடாத, புவியிலிருந்து பெறப்படும் 2 வளங்கள் தருக?
3. இரத்தினக்கற்களில் காணப்படும் எந்தப் பண்புகள் காரணமாக அவை முக்கியத்துவம் பெறுகின்றன.
4. பட்டை திட்டுவதன் மூலம் இரத்தினக்கற்களின் பிரகாசம் அதிகரிப்பதற்கான காரணம் யாது?
5. களிமண் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக?
6. காரீயம் ஒரு கனியம், கருங்கல் ஒரு பாறை. கனியத்துக்கும் பாறைக்கு முள்ள வேறுபாடு யாது?
7. வெவ்வேறு நிறங்களில் இரத்தினக்கற்கள் காணப்படுவதற்கான காரணம் யாது?


(02) தாவரங்கள் தமக்குத் தேவையான உணவைத் தாமாகவே உற்பத்தி செய்து கொள்ளும் ஆற்றலையுடையன. தாவரங்களில் நிகழும் இவ்வுற்பத்திச் செயல்முறை ஒளித் தொகுப்பு எனப்படும். ஒளித்தொகுப்பு நடத்தும் தொழிற்சாலையாகச் செயற்படக் கூடியவாறு தாவர இலைக் கட்டமைப்பு அமைந்துள்ளது.

1. ஒளித் தொகுப்புக்கு அவசியமான காரணிகள் எவை?
2. மாப்பொருள் எம் மூலகங்களால் ஆக்கப்பட்டது?
3. ஒளித்தொகுப்பு செயன்முறையில் சம்பந்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டைத் தருக?
4. இலை ஒன்றில் மாப்பொருள் அடங்கியுள்ளது என்பதைக் காட்ட நீர் மேற்கொள்ளும் பரிசோதனையின் படிகளைத் தருக?
5. சூரிய ஒளியின் எந்த நிற ஒளிக்கதிர்கள் மாப்பொருள் உற்பத்தியில் பிரதான பங்கேற்கின்றன?
6. ஒளித்தொகுப்புக்குத் தேவையான சூரிய ஒளியைச் சிறப்பான அளவில் பெறுவதற்கு இலைகள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் எவை?
7. ஒளித் தொகுப்புச் செயன்முறைக்காக இசைவாக்கமடைந்துள்ள இலை தவிர்ந்த வேறு தாவரப்பகுதிகளைக் கொண்டுள்ள தாவரங்கள் 2 தருக?

(03)




I). படம் Iல் கடிகாரத்தின் வில் சுற்றப்பட்டிருக்கும் போது அதில் சேமிக்கப்பட்டிருக்கும் சக்தி வகை எது?
II) கடிகார முள்ளை இயக்குவதற்குத் தேவையான சக்தி எதன் மூலம் ஊடு கடத்தப்படுகிறது?
III) கடிகாரம் இயங்கும் போது நிகழும் சக்தி மாற்றம் யாது?
IV) படம் II ல் தைனமோ அச்சைச் சுழற்றுவதற்குக் காணப்படும் உபாயம் எது?
V) தைனமோ சுழலும் போது இருவாயியில் அவதானிக்கக் கூடிய மாற்றம் யாது?
VI) இருவாயியில் மாற்றம் நிகழாவிடில் மாற்றத்தை உண்டாக்க யாது செய்யலாம்?
VII) ஒளிகாலும் இருவாயி ஒளிரும் போது இங்கு நடைபெறும் சக்தி மாற்றம் யாது?





04. மேலேயுள்ள படம் வேர்மயிர்க்கலம் ஒன்றின் அமைப்பைக் காட்டுகிறது.
I) A,B,C,D,E ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
II) இக்கலமானது மண்ணிலுள்ள நீரை உறிஞ்சுவதற்குக் காரணமான தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
III) வினா i.வினா ii.ல் உள்ள தோற்றப்பாட்டுக்கு உதவும் கலப்பகுதி எது?
VI) இப்பகுதி கொண்டுள்ள சிறப்பியல்பு யாது?
V) உயிர்ப்பான அகத்துறிஞ்சல் மூலம் வேர் மயிர்க்கலங்கள் சில கனியுப்புக்களை உள்ளெடுக்கின்றன. இங்கு உயிர்ப்பான அகத்துறிஞ்சல் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
V) மிளகாய்ச்செடி ஒன்றின் நிலமட்டத்தில் உள்ள தண்டுப் பகுதியைச் சுற்றி உப்பிட்டபோது அது வாடிக்காணப்பட்டது. இதற்கான விளக்கம் யாது?

(05)

1. ஒரு மூலகத்தின் சாரணுத்திணிவு என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
2. அமோனியம் சல்பேற்றின் மூலக்கூற்றுச் சூத்திரம் $(NH_4)_2SO_4$ ஆகும்.

i. அமோனியம் சல்பேற்றில் காணப்படும் மூலகங்கள் எவை?
ii. அமோனியம் சல்பேற்றில் உள்ளதாக நீர் குறிப்பிட்ட மூலகங்கள் ஒவ்வொன்றிலும் எத்தனை அணுக்கள் அதில் காணப்படுகின்றன.?
iii. N= 14 H= 1 S=32 O=16 C=12 என்பன குறித்த மூலகங்களின் சாரணுத்திணிவுகளாயின் அமோனியம் சல்பேற்றின் சூத்திரத் திணிவு யாது?
iv. அமோனியம் சல்பேற்று யூரியா ஆகியன மண்ணில் நைதரசன் வளத்தை கூட்டப் பயன்படும் இரசாயனச் சேர்வைகள். இவற்றின் சிறந்தது எது என அறிவதற்கு அவை ஒவ்வொன்றிலுமுள்ள நைதரசன் சதவீதத்தை பெற வேண்டியுள்ளது.

i. அமோனியஞ் சல்பேற்றில் நைதரசன் சதவீதம் யாது?
ii. யூரியாவில் மூலக்கூற்று சூத்திரம் $CO(NH_2)_2$ எனின் யூரியாவில் நைதரசனின் சதவீதம் யாது?
iii. எது சிறந்த நைதரசன் பசளை? உமது விடைக்கான காரணத்தைத் தருக.




தரப்பட்ட படத்தில் மின்சுற்று ஒன்று காணப்படுகிறது.
1) A,B,C,D ஆகியவற்றைப் பெயரிடுக.
2) A,B,C,D ஆகியவற்றின் பணிகளைக் குறிப்பிடுக.
3) உருகியாக பயன்படுத்தப்படும் உலோகத்துக்கு இருக்க வேண்டிய முக்கிய இயல்பு ஒன்றை குறிப்பிடுக.
4) நுகர்வோர் பயன்படுத்தும் மின் கணியம் எவ் அலகினால் அளக்கப்படுகிறது.
5) வளைதகு மின்வடமொன்று 7/0.85 என்னும் குறியீட்டின் மூலம் குறிக்கப்படுகிறது. இந்தக் குறியீட்டின் மூலம் வடத்தின் எத்தகவல்கள் வெளிக்காட்டப்படுகின்றன?
6) உயிர் நொதுமல் கம்பிகளை இனங்கான உட்கவசங்களில் பயன்படுத்தப்படும் நிறங்களைக் குறிப்பிடுக.
7) உருகிகளுக்குப் பதிலாக தற்போது பயன்படுத்தப்படும் அமைப்பு எது?

| உலோகம் | ஐதான HCl உடன் தாக்கம் |
|---|---|
| A | மெதுவாக ஐதரசனை வெளியேற்றியது |
| B | விரைவாக ஐதரசனை வெளியேற்றியது கரைசல் வெப்பமானது |
| C | தாக்கம் எதுவும் நிகழவில்லை. |
| D | மிக விரைவாக ஐதரசனை வெளியேற்றியது, கரைசல் சூடானது. |

1) ஐதரசனை இனங்காண்பதற்கான சோதனை ஒன்று குறிப்பிடுக?
2) மேலுள்ள உலோகங்களை தாக்குதிறனின் இறங்கு வரிசைப்படி ஒழுங்குபடுத்துக?
(தாக்குத்திறன் மிக்க கூடிய உலோகத்தை முதலில் வைக்க)
3) உலோகம் A யில் சிறியதுண்டு ஒன்று செப்புசல்பேற்றுக் கரைசலிலுள் இடப்பட்டது. தாக்கம் மிக மெதுவாக நிகழ்ந்தது. உலோகத்தின் மீது செங்கபில நிற வீழ்படிவுஏற்பட்டது.
a) உருவான செங்கபில நிற வீழ்படியிலுள்ள பதார்த்தம் யாது?
b) இங்கு நடைபெற்ற தாக்கம் எவ்வகையான தாக்கம் என்பதைக் குறிப்பிடுக.
c) மேலே நீர் குறிப்பிட்ட தாக்க வகைக்கான பொதுச் சமன்பாட்டை எழுதுக.
d) பின்வரும் தேவைகளுக்குப் பொருத்தமான உலோகத்தை / கலப்பு உலோகத்தை தேர்ந்து எழுதுக.
நீர் அவ்வுலோகத்தை/ கலப்பு உலோகத்தைத் தெரிந்தெடுத்தற்கான காரணத்தையும் எழுதுக? அமிழ்ப்பு வெப்பமாக்கிச் சுருள்கள் மின் உபகரணங்களில் ஒட்டி இணைத்தல்.

ஆசிரியர்- K. நிர்மலன்

# பொலிஸாரின் காவலில் இருந்தபோதே கைதிகள் மீட்புச் சம்பவம் நடந்தது!

## முதற்கட்ட விசாராணையில் தகவல்

யாழ்ப்பாணம்

யாழ்.சிறைச்சாலையில் ஆயுத முனையில் இரண்டு கைதிகள் மீட்கப்பட்டபோது சிறைச்சாலையினுள் விசேட பாதுகாப்புக்காக நான்கு பொலிஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான இரண்டு சந்தேகநபர்களில் ஒருவர் மல்லாகம் நீதிமன்றிலும், மற்றுமொருவர் பருத்தித்துறை நீதிமன்றிலும் ஆஜர்படுத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்.சிறைச்சாலை அதிகாரிகளின் கோரிக்கைக்கமைய மேலதிக பாதுகாப்புக்காக நான்கு பொலிஸார் சிறைச்சாலையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இவர்கள் கடமையில் இருந்தபோதே ஆயுதபாணிகளால் மேற்படி இரண்டு கைதிகளும் மீட்கப்பட்டனர். கைதிகள் கடத்திச் செல்லப்படும் வரையில் தமக்கு எதுவும் தெரியாது என்று மேற்படி பொலிஸார் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, கைதிகள் மீட்புச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படாத அதேவேளை, தப்பிச்சென்ற கைதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவில்லை என்பது குறிப்பிட்டுள்ளது.

# குடாக்கடலின் மாதிரி நீர் கொழும்புக்கு அனுப்பிவைப்பு!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டு கடல் நீரில் ஏற்பட்டுள்ள நச்சுத்தன்மை குறித்து ஆராய்வதற்காக கடல் நீரின் மாதிரி கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

யாழ்.குடாக்கடல் நீரில் ஏற்பட்டுள்ள நச்சுத்தன்மையால் ஏற்படும் விபரீதங்கள் தொடர்பாக - கடல்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் மேற்படி திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இதன்பின்னர் மாதிரி கடல் நீர், திணைக்கள அதிகாரிகளால் எடுக்கப்பட்டு தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தேசிய கடற்தொழில் நீரியல் நிறுவனம் இதனை பரிசோதனையிடவுள்ளது.

குடாக்கடலில் நச்சுத்தன்மை ஏற்பட்டிருப்பதாக வெளியான தகவலையடுத்து குடாநாட்டில் மீன்களின் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (90)

# புனிதநகர் குடியிருப்பு திட்டத்திற்குள் மழை வெள்ளம் புகும் அபாயம்!

பருத்தித்துறை

பருத்தித்துறை புனிதநகர் குடியிருப்புத் திட்டத்தில் வாழும் மக்கள் குடியிருப்புகளுக்குள் மழை வெள்ளம் புகும் அவல நிலையில் வாழ்ந்துவருகின்றனர்.

கடந்த பல நாட்களாக தொடரும் மழையால் தாழ்வுப் பிரதேசமான இந்தப் பகுதியில் வெள்ளம் நிறைந்து காணப்படுவதோடு குடியிருப்புகளுக்குள் உள்நுழையும் அபாயம் காணப்படுகிறது.

அத்துடன் இந்தக் குடியிருப்புத் திட்டத்துக்குச் செல்லும் ஆனைவிழுந்தான் வீதியும் மழை வெள்ளத்திற்குள் மூழ்கி இந்தப் பகுதி மக்களின் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதோடு -

பருத்தித்துறை நகரக் கழிவுகளை இந்தப்பகுதி மக்களின் குடியிருப்புகளுக்கு அருகில் கொட்டுவதால் தற்போது மழையுடன் அவை குடியிருப்புகளுக்குள் செல்வது சுகாதாரச் சீர்கேடாக உள்ளதோடு, துர்நாற்றமும், நுளம்புப் பெருக்கமும் தொற்றுநோய் பரவும் அபாயத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே, தமது நிலைபற்றி சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (14)

# கசிப்பு அழிப்பு நடவடிக்கையில் களவாடப்பட்ட பொருட்கள் மீட்பு

மானிப்பாய்

ஆனைக்கோட்டைப் பகுதிகளில் அண்மைக்காலமாக கசிப்பு உற்பத்தி பெருகிவருவதை அந்தப் பகுதி மக்கள் பல பொது அமைப்புகளிடம் முறையிட்டு வந்துள்ள நிலையில் -

சாவற்கட்டு மகாத்மா சன சமூக நிலையத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் ஒன்றிணைந்து நேற்றையதினம் கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களைக் கண்டறிந்து அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது 40 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் களவாடப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை மேற்படி குழுவினர் கண்டுபிடித்தனர். அத்துடன் இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்ட இரு சந்தேக நபர்கள் பிடிக்கப்பட்டு பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டு மானிப்பாய் பரிஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருப்பதாகவும், இவர்களுடன் தொடர்புடைய ஆட்டோ ஒன்றும் தேடப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் அனுப்பி மணித்தியாலங்கள் ஆகியும் அவர்கள் வந்து சேராமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. (100)

## சிறுவனிடம் சங்கிலி அபகரிப்பு

பருத்தித்துறை

கடந்த வெள்ளிக்கிழமை திருமண வைபவத்துக்கான தொண்டைமானாறு சந்நிதி கோவிலுக்குச் சென்றிருந்த சிறுவர்களை குரங்கு காட்டுவதாகக் கூறி அழைத்துச்சென்ற இளைஞர்கள் சிறுவன் ஒருவன் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண் சங்கிலியை அபகரித்துத் தப்பிச் சென்றனர்.

தம்பசிட்டிப் பகுதியைச் சேர்ந்த 7 வயதுடைய சிறுவன் ஒருவரது சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது. (14)

# வடமராட்சியில் அடிக்கடி ஏற்படும் மின் தடையால் மக்கள் பாதிப்பு!

பருத்தித்துறை

வடமராட்சிப் பகுதியில் மாலை வேளைகளில் அடிக்கடி ஏற்பட்டுவரும் மின்தடை காரணமாகப் பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சிப் பிரதேசமெங்கும் அண்மைக்காலமாக மின் விநியோகம் சீரற்ற நிலையில் இருந்துவருகிறது. நாள்தோறும் மாலை, முன்னிரவு வேளைகளில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் மாணவர்களின் கல்வி உட்பட அன்றாடச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையும் நெருங்கி வருகின்ற நிலையில் வடமராட்சி மின்சார சபையினர் அதிக கவனமெடுத்து மின் விநியோகத்தைச் சீராக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோருகின்றனர். (14)

# பட்டப்பின் டிப்ளோமா பரீட்சையில் மூன்று பேருக்கு விசேட சித்தி!

யாழ்ப்பாணம்

இலங்கை திறந்த பல்கலைக் கழக பிராந்திய நிலையத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மூன்று பேர் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

வி.யமுனா (சுதுமலை தெற்கு), திருமதி என்.மதிவதனா (528, பலாலி றோட், திருநெல்வேலி), கலாநிதி எஸ்.ஸ்ரீசற்குணராசா ஆகிய மூவருமே அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கைக்குத் தோற்றியவர்களில் இந்த வருடமே மூவர் விசேட சித்தி பெற்றுள்ளனர். 176 பேர் இந்த டிப்ளோமா கற்கைக்கு தோற்றிய போதிலும் 48 பேரே சித்தியடைந்தனர்.

திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் இம்முறையே அதிகளவானோர் சித்தியடைந்துள்ளதாகவும் பிராந்திய நிலைய இயக்குநர் எந்திரி ச.ஆ. ஞானேந்திரா தெரிவித்தார்.

# நடுக்கடலில் பழுதடைந்த 'குமுதினி' பயணிகள் படகு!

நெடுந்தீவு

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையிலான பயணிகள் சேவையில் ஈடுபடும் குமுதினிப்படகு நேற்றுமுன்தினம் குறிகட்டுவானிலிருந்து - நெடுந்தீவு செல்லும்போது நடுக்கடலில் பழுதடைந்து, சமுத்திராதேவி படகு மூலம் இழுத்துச்செல்லப்பட்டு பெருமளவு பயணிகளுடன் நெடுந்தீவில் கரைசேர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒரு வார காலத்துக்குமேலாக திருத்த வேலைக்காக சேவையில் ஈடுபடாமல் இருந்த குமுதினிப் படகு கடந்த வியாழக்கிழமை முதல் சேவையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தகது.

இருப்பினும் தற்போது மழை காலத்தில் மீண்டும் சேவையில் ஈடுபடாதிருப்பதால் பயணிகள் மத்தியில் பெரும் சினத்தை உண்டுபண்ணியுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்குச் சொந்தமான இந்தப் படகு இவ்வாறு போதிய பராமரிப்பின்மை மற்றும் மாற்று படகு சேவை இடம்பெற புதிய படகு கட்டப்படாமை போன்ற காரணங்களால் நெடுந்தீவு மக்கள் தமது அன்றாடப் போக்குவரத்துக்குச் சீரான சேவை செய்யும் படகு இன்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. (113)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : யோ.எப்சிபா
முகவரி : யாழ்ப்பாணம்

அகவை ஐந்து



பெயர் : ச.சிவடினேஜினி
முகவரி : வேலணை.

அகவை எட்டு



பெயர் : தே.அகிலா
முகவரி : புலோலி தெற்கு.

வாழ்க வளமுடன்





# மாவீரர்தின ஏற்பாட்டுக்கு தயாராகும் மக்கள்

பருத்தித்துறை

தமிழீழ மாவீரர் தினத்தை உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்க வடமராட்சிப்பகுதி பொது மக்கள் தயாராகிவருகின்றனர்.

வடமராட்சியில் அண்மையில் பொது அமைப்புகள்இணைந்து துயிலுமில்லப் புனரமைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர் தினத்தை சிறப்பாக அனுஷ்டிப்பதற்குரிய ஆலோசனைகளை நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் மாவீரர் நாளை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் அனுஷ்டிப் பது எனவும் முக்கியமாக 25, 26, 27 ஆம் திகதிகளில் மாவீரரின் பெற்றோர்களைக் கௌரவித்தல் உட்பட பொது இடங்களில் சிரமதானப் பணி, பொதுப்பணி உட்பட பல்வேறு நிகழ்வுகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இறுதிநாள் நிகழ்வுகள் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படும். (14)

# சில்லு திடீரென இறுகியதால் மதகுக்குள் புகுந்த லொறி!

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நேக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி அதன் முன் சில்லு இறுகியதால் வல்லை வெளியிலுள்ள மதகிற்குள் புகுந்து நின்றது.

இதனால் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் அதனூடான போக்குவரத்துகள் தடைப்பட்டு போக்குவரத்து சேவைகள் சந்நிதி சந்தியூடாக மண்டான் சந்தி என போக்குவரத்துக்கள் மேற்கொள்ளப்பட்டது.

சில்லு இறுகியதால் யாழ். நோக்கி வந்த லொறி முற்றாகத் திரும்பி நின்றபோதும் அந்த நேரத்தில் வேறு வாகனம் எதுவும் வராததனால் விபத்துக்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)



கரவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திக்கென அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட கொடிவார நிகழ்வில்- முதலாவது கொடியைப் பெற்றுக்கொண்ட யாழ்.அரச அதிபர் கே. கணேஷ், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனிடம் அதற்கான நிதியைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (14)

# நாம் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்து

# எமது தலைவரின் பாதையில் தாயகம் மீட்போம்

## பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவை

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு வாக்களித்து, அவர்களை வெற்றியடையச் செய்து எமது ஏகோபித்த எழுச்சியை சிங்கள தேசத்திற்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்துவது என்பது தான் ஒரேயொரு நோக்கமாக இருந்தது. அதில் வெற்றியும் பெற்றோம்.

நாம் தொடர்ந்து முப்படைகளினதும் ஆக்கிரமிப்புக்குள்ளேயே வாழ்ந்து வருகிறோம். அப்படையினர் எமது சொந்த நிலங்களை, சொந்த வீடுகளை உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி, ஆக்கிரமித்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்பாளர்களின் தளபதியான ஜனாதிபதியை தமிழ் மக்களாகிய நாம் ஏன் எமது வாக்குகளை அளித்து தெரிவு செய்ய வேண்டும்.

கடந்த பொதுத் தேர்தலில் ஒருமுகமாக வாக்களித்த தமிழ் மக்களாகிய நாம்- இந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிப்போம் என எண்ணியிருந்த ரணில், நாம் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமக்கு நிச்சயமாகக் கிடைக்காது எனத் தெரிந்த பின்பு தனது நயவஞ்சகக் கபடத்தனத்தை, அதுவும் தனது வாயால் கூறி சிங்களமக்களின் வாக்குகளைப் பெறாது தனது சகாவான மிலிந்தமொறகொட மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

அதாவது விடுதலைப் புலிகளை யுத்த நிறுத்த மூலம் ஓர் உடன்பாட்டுக்கு அழைத்து, சர்வதேச சமூகத்துக்குக் கொண்டு சென்று கருணாவைத் தனிமைப்படுத்தி பிரித்து ஓர் குழுவாக இயங்கவைத்து, புலிகளை இரண்டாகப் பிரித்து புலிகளின் வளர்ச்சியில் அவர்களைப் பலவீனப்படுத்தி விட்டேன் எனவும், அந்தக் காலத்தில் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்புச் செய்தேன் எனவும், நான் உண்மையில் பேச்சுவார்த்தை செய்ய விரும்பவில்லை எனவும் கூறப்பட்ட செய்தியே அதுவாகும். அத்தோடு அவசரகால நீடிப்புப் பிரேரணையின்போது ஆதரவாக வாக்களித்து அதை நிறைவேற்றினார். இது ஓர் பெரிய இரகசியம் போலவும், இதனைத் தான் இப்போது வெளியிடுவது போலவும் மிலிந்த மொறகொட மூலம் சிங்கள மக்களது வாக்குகளைப் பெற முயற்சி செய்கிறார். அதுவும் எமது வாக்குகளை நம்பியிருந்து ஏமாற்றமடைந்த நிலையில் வெளிப்படுத்துகிறார். ஆக மொத்தத்தில் தான் எப்படியாவது ஜனாதிபதியாக வந்தால் போதும் என்பதே நோக்கம்.

உண்மையில் ரணில் என்றாலும் சரி, மஹிந்த என்றாலும் சரி தமிழர்களாகிய எம்மை நேசித்திருந்தால் எமக்கோர் தலைமையுண்டு. எமக்கோர் தாயகமுண்டு. எமக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. தன்னாட்சி அதிகாரமுண்டு எனக்கூறி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஓர் வரியாவது கூறியிருக்கலாம்.

இதனை எமது சகோதரர்களான மலையக மக்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எமது தலைவர் சென்ற மாவீரர் தின உரையில் கூறியது போல் பேச்சும் இன்றி, தீர்வும் இன்றி எமது மக்களின் அன்றாட இயல்பு வாழ்வுகூட ஓர் முடிவில்லாத அரசியல் வறுமைக்குள் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நாம் எமது தாயகத்தை, எமது மண்ணை மீட்டெடுத்து சுதந்திரத்துடனும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ நாம் அனைவரும் மீண்டும் ஒருமுறை ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற உண்மை நிலையைத் தவிர வேறு வழியில்லை என்பதனை பேரினவாத சிங்கள அரசு எமக்குத் தெட்டத்தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

இன்று எதற்கும் தயாரான நிலையில் நிற்கும் நாம் - எதற்கும் எதிர்வரும் மாவீரர் தினத்தில் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் மாவீரர் தின உரையை எதிர்பார்த்து நிற்கிறோம்.

எனவே, நாம் அனைவரும் ஒருமித்து தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம், மீண்டும் ஒரு முறை எமது தமிழ்த் தேசிய எழுச்சியை சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் வெளிக்காட்டுவோம் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடற்தொழில் திணைக்களத்தால் படகுகள், இயந்திரங்கள் வழங்கல்

வடமராட்சி கிழக்கு

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு கண்ணாடியிழைப் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் ஆகியவற்றை கடற்தொழில் திணைக்களம் இலவசமாக வழங்கவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சேதமடைந்த படகுகளை கடற்தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்த கடற்தொழிலாளர்களில் எட்டுப் பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு படகுகள், இயந்திரங்களை இந்த வாரம் வழங்க விருப்பதாக தாளையடி கடற்தொழில் பரிசோதகர் ந.கணேசமூர்த்தி தெரிவித்தார். (21)

# கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கியில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவானோர் விபரம்

கிளிநொச்சி

சர்வதேச சேமிப்பு தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி கிராமிய அபிவிருத்தி வங்கியில் ஒக்ரோபர் 24ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான முதலீட்டு சேமிப்புக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டு, குலுக்கல் முறையில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவானோரின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2 ஆம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பின்வருவோர் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவாகினர்.

ந.யாமினி (இல.33, கனகபுரம் - கிளிநொச்சிக் கிளை), நா.செல்வகுமாரி (உடையார் கட்டு வடக்கு - புதுக்குடியிருப்புக்கிளை), பா.புஸ்பராஜ் (வற்றாப்பளை - முள்ளியவளைக் கிளை), க.விஜயராணி (பூநகரி - பூநகரிக் கிளை), வ.யோகராசா (திருக்கேதீஸ்வரம் - மன்னார் கிளை), ஜெ.விஜயரஞ்சினிதேவி (கனகராயன்குளம் - வவுனியாக் கிளை), ச.கனகசபாபதி ( விநாயகபுரம் - மல்லாவிக்கிளை).

இவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி மாலை 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# இடைத்தங்கல் முகாம்களில் வெள்ளம்; பொது இடங்களில் மக்கள் தஞ்சம்!

வடமராட்சி கிழக்கு

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள இடைத்தங்கல் முகாம்களை அண்டிய பகுதிகளில் மழை நீர் தேங்கியுள்ளது.

குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன் கிராமங்களிலுள்ள 100 வரையான இடைத்தங்கல் முகாம்களுக்குள் நீர் புகுந்துள்ளது.

இதனால் இடைத்தங்கல் முகாம்களிலுள்ள மக்கள் பொது இடங்களில் தங்க வைப்பதற்கும், இவர்கள் தங்குவதங்குரிய கூடாரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் சுனாமி கடல் அனர்த்த செயலணியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (21)

## முன்பள்ளிக்கான கட்டடம்

தாளையடி

கால்குறோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாளையடிக் கிராமத்தில் முன்பள்ளிக்கான கட்டடம் ஒன்றை அமைத்து வருகிறது. (21)

# பனை விதை நாட்டும் பணி

வடமராட்சி கிழக்கு

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான கடற்கரை வீதியில் பனம் விதைகள் நடும்பணியை ஒக்ஸ்பாம் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இந்தக் கிராமங்களிலுள்ள ஊரக மேம்பாட்டுக் குழுவினரின் உதவியுடன் பனம் விதைகள் நடும் பணியை கிராம மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கான நாளாந்த கொடுப்பனவை ஒக்ஸ்பாம் நிறுவனம் வழங்கிவருகிறது. (21)

## தையல் கண்காட்சி

செம்பியன்பற்று

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் உழைக்கும் மகளிர் நிறுவனத்தால் செம்பியன்பற்று வடக்கு கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பின் முடிவில் கண்காட்சியும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இந்த மாதம் காலை 10 மணிக்கு செம்பியன்பற்று பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (21)

## ஆங்கில மொழிமூலம் கற்பிக்க ஏற்பாடு

வட்டக்கச்சி

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் 2006ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 6 இருந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்கள் ஆங்கிலமொழி மூலம் கற்பிக்கப்படவுள்ளது.

இதில் கற்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (09)

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### நவம்பர் - 16

1824: அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த நாடுகாண் ஆர்வலரான ஹமில்டன் ஹியூம் அவுஸ்ரேலியாவிலேயே மிக நீளமான நதியாகிய மர்ரே நதியைக் கண்டுபிடித்தார்.

1860: முதன்முதலாக இந்திய ஒப்பந்தத் தொழிலாளர்கள், தென்னாபிரிக்காவின் நேட்டால் துறைமுகத்தைச் சென்றடைந்தனர்.

1868: பிரித்தானியாவைச் சேர்ந்த மிஸ்.லே பிரின்சஸ் என்பவர் தான் கண்டுபிடித்த ஒற்றை வில்லைப் புகைப்படக் கருவிக்கும், ஒற்றை வில்லையைக் கொண்ட ஒளி குவிந்து வீசச் செய்யும் இயந்திரத்திற்கும் (Projector) காப்புரிமத்தைப் பெற்றார்.

1907: அமெரிக்காவின் 46ஆவது மாநிலமாக ஒக்ல ஹாமா இணைந்து கொண்டது.

1917: அமெரிக்கா தனது நாட்டில் வதியும் எதிரி நாடுகளைச் சோந்தவர்களைப் பதிவு செய்யுமாறு கட்டளையிட்டது. இவர்களுள் வொஷிங்டன் நகரிலிருந்தவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். சுமார் ஆறு லட்சம் வரையிலானவர்கள் இந்தக் கட்டளையால் பாதிக்கப்பட்டனர்.

1918: போலந்து விடுதலையடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

1919: பிரான்ஸில் முதன்முதலாக பெண்களுக்குரிய வாக்குரிமை வழங்கப்பட்டது.

1923: முதன் முதலாக B.B.C. வானொலியில் பொழுது போக்கிற்காக இசைக்கச்சேரி ஒலிபரப்பப்பட்டது.

1928: ஆபாசமான நூல் வெளியிட்டதாகக் கூறி முதன் முதலாக ஒரு வெளியீட்டாளர் மீது லண்டனில் வழக்குத் தொடரப்பட்டது. பெண்களின் ஓரினச் சேர்க்கை பற்றிய தி வெல் ஒப் லோன் லினஸ் என்னும் நாவலை வெளியிட்டமைக்காகவே இந்த வழக்குத் தொடரப்பட்டது.

1933: ரஷ்யாவுடன் இராஜதந்திர உறவை மீண்டும் தொடங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அறிவித்தார்.

1938: சீனாவின் சாங்ஷாவில் இந்த மாதம் 12 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்து அணைக்கப்பட்டது. கடந்த ஐந்து நாட்களாகப் பற்றி எரிந்த தீ சாங்ஷா நகரையே முற்றாக அழித்து சாம்பலாக்கியது.

1945: அமெரிசியம் (95ஆவது மூலகம்), கியூரியம் (96 ஆவது மூலகம்) என்ற இரு மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1948: தொழிற்சாலைப் புகையிலுள்ள திட, திரவ கழிவுப் பொருட்களை அகற்றி, காற்றில் மாசுக்கள் கலப்பைக் குறைக்க உதவும் எலக்ட்ரோஸ்ட்டாடிக் ஸ்மோர் பிரிசிபி டேட்டர் என்ற கருவியைக் கண்டுபிடித்த அமெரிக்கரான பிரடேரிக் கார்ட்னர் காட்ரேல் காலமானார்.

1965: ரஷ்யா, வெனீரா – 3 என்ற விண்கலத்தைச் செலுத்தியது. இந்த ஊர்தி 1966ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிரகத்தின் தரையில் விழுந்து சிதறியது.

1973: அமெரிக்கா ஸ்கைலாப் என்னும் விண்வெளி நிலையத்தைச் செலுத்தியது. இதில் சென்ற விண்வெளி வீரர்கள் 85 நாட்கள் அதில் தங்கியிருந்தனர். நான்கு தடவைகளில் மொத்தம் 22 மணி 20 நிமிடங்கள் விண்வெளியில் நடந்தனர்.

1974: போர்ட்டோரிகோவிலுள்ள ஆர்சிபோ வானொலி தொலைநோக்கி மூலம் ஹெர்குலிஸ் விண்மீன் மண்டலத்தைச் சேர்ந்த எம்–13 என்ற மூன்று இலட்சம் விண் மீன்களைக் கொண்ட தொகுதியை நோக்கி பூமியைப் பற்றிய தகவல் குறிப்புகள் ஒலிபரப்பப்பட்டன.அங்கு தொழில்நுட்பத்தில் முன்னேறிய உயிரினங்களிலிருந்து இந்தத் தகவல் குறிப்புக்களைப் பெற்று, அவற்றை விளங்கிக்கொண்டு, பதில் தருமாயிருப்பின் அந்தத் தகவல்கள் பூமியை வந்தடைய 50000 ஒளியாண்டுகள் ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1978: உலகின் வட திசையில் ஒரு புதிய தீவு கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத் தீவின் மொத்தப் பரப்பளவு 200 சதுர கிலோ மீற்றராகும். இது கிரீன் லாந்துக்கு வடக்கே உள்ளது.

1987: பிரிட்டனில் மிக மோசமான புயல் வீசியது. இதனால் தென் இங்கிலாந்தில் ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான மரங்கள் வேரோடு சாய்ந்தன. காப்புறுதிக் கம்பனிகள் வரலாறு காணாத தொகையை இழப்பீடாக வழங்கவேண்டி ஏற்பட்டது.

1988: ஈஸ்டோனியா விடுதலையடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

1990: போலந்தும் – ஜேர்மனியும் எல்லைப் பிரச்சினை தொடர்பாக உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டன.

1993: ரஷ்ய அரசு மொஸ்கோவிலுள்ள லெனின் அருங்காட்சியகத்தை மூடிவிட்டது.

1994: ஆசிய – பசுபிக் பொருளாதார ஒத்துழைப்புப் பேரவை 2020 ஆம் ஆண்டுக்குள் ஆசிய பசுபிக் பகுதியில் தங்குதடையற்ற வர்த்தகம் நடைபெறும் திட்டம் நிறைவேறும் என்று அறிவித்தது.

1995: தமிழ்த் தேசிய தலைவர் மேதகு வே.பிரபாகரன் இருக்குமிடத்தைப் பற்றிய தகவல் தருபவர்களுக்கு இரண்டரைக்கோடி ரூபா தரப்படும் என இலங்கை அரசு அறிவித்தது.

1995: நைஜீரியாவுக்கு ஆயுத விற்பனை செய்வதை ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்தது.

தொகுப்பு :- சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

துருத்திக் கொண்டிருக்கும் ஆணி சுத்தியலால் தட்டி அமுக்கப்படும்.
- ஜப்பான் -

## நமது நோக்கு

### சிந்தனைத் தெளிவுடன் எடுத்த தீர்க்கமான முடிவு!

நாளைய தினம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்து அன்றைய நாளை துக்கதினமாக அனுஷ்டிப்போம் என யாழ்.பொது அமைப்புகள் தமிழ் பேசும் மக்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளன. தமிழ் பேசும் மக்களை யுத்தமூலம் ஆயுதமுனையில் அடக்கி, ஒடுக்கி அவர்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளை சட்டபூர்வமாகவே படிப்படியாக அபகரித்து, அவர்களை வெறுமிகளாக - மூன்றாந்தர பிரஜைகளாகக்கூட அல்லாது வந்தேறு குடிகளென வர்ணித்து - அவமதித்து ஒதுக்கிய சிங்கள பேரினவாத ஆட்சித் தலைவர்களும், ஏனைய தென்பகுதி அரசியல்வாதிகளும் தேர்தல் காலங்களில் மட்டும் அவர்களது வாக்கு வங்கியைப் பயன்படுத்த வாக்குறுதிகளை வழங்கும் நிகழ்வை அரங்கேற்றும் பிரசார நடவடிக்கைகள் எதனையும் அரச கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு - கிழக்கு பகுதிகளில்கூட இம்முறை செய்யமுடியாமல் போயிற்று. இதற்கு கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலான சமாதானம் என்ற சொல்லப்பட்ட காலப்பகுதிக்குள் தமிழ்மக்கள் பட்டுணர்ந்த வரலாற்று அனுபவங்களே காரணமாகும்.

இந்தத் தேர்தலில் வாக்களிப்பை பகிஷ்கரிப்பது, வாக்களிப்பு நாளை கரிநாளாக கடைப்பிடிப்பது என்று வடக்கு-கிழக்கு தமிழ்பேசும் மக்கள் எடுத்துள்ள தீமானமானது தென்பகுதி அரசியல் தலைவர்கள் ஒருபோதுமே எதிர்பார்க்காத ஒன்றேயாகும்.

தமிழ்மக்கள் வாக்களிப்பை பகிஷ்கரிப்பதானது தங்கள் தங்கள் தேர்தல் வெற்றியை பாதிக்காது என ஒப்புக்கு இரு பிரதான வேட்பாளர்களும் அறிக்கை விடுத்தாலும், தமிழர் தரப்பு எடுத்த இந்த முடிவானது இரு தரப்பினருக்கும் ஏமாற்றத்தையும், எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளதை மறுக்கமுடியாது.

நாளைமறுநாள் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிடும். தென்பகுதி மக்கள் தங்களுக்கான ஜனாதிபதியைத் தெரிவுசெய்துவிடுவார்கள். அந்த ஜனாதிபதி - பின்னர் பௌத்த மதபீடத் தலைவர்களான மும்மணிகளினதும்-சம்பிரதாயத்துக்கு ஏனைய மதகுருமார்களதும் ஆசிகளைப் பெற்று ஆட்சியில் அமர்ந்துகொள்ளும் நாளுக்காக காத்திருப்பர். அந்த நாளில் பதவியேற்றதும் மகிந்தவின் சிந்தனைகளோ அல்லது மக்கள் நிகழ்ச்சி நிரலோ நடைமுறைப்படுத்தப்படும் என எவரும் நம்புதல் சாத்தியமேயில்லை.

பதவியேற்கப்போகும் எந்த ஜனாதிபதியும் சுயாதீனமாக, சுதந்திரமாக தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எந்தவொரு வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

இரு பிரதான வேட்பாளர்களில் எவர் பதவியேற்றாலும் அவர் உள்ளக மற்றும் வெளியக அரசியல் அழுத்தங்களுக்கும், அறிவுறுத்தல்களுக்கும் ஆட்பட்டு நடக்க வேண்டிய அவசியம் நிறையவே உள்ளது.

பொதுவாகவே முரண்நிலைக்கொள்கைகளைக் கொண்டதான இந்த உள்ளக - வெளியக அழுத்தங்களின் தாக்கமானது தேசிய அரசியல் ரீதியிலான எரியும் பிரச்சினைகளுக்கு தீர்க்கமானதும், நியாயமானதுமான எந்தவொருமுடிவையும் எடுக்க அனுமதிக்கப்போவதில்லை என்பதை ஒரு எதிர்வுகூறலாகவே சொல்லமுடியும்.

ஜே.வி.பி, ஹெலஉறுமய என்ற தரப்பிலான பேரினவாத சக்திகளும் இந்தியா, அமெரிக்கா போன்ற வல்லாதிக்க சக்திகளும் இலங்கையில் எந்தவொருவகையிலும் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஒருங்கிணைந்து நியாயமாகச் செயற்படப்போவது கிடையாது என்பதை கடந்தகாலவரலாற்று நிகழ்வுகள் உறுதிசெய்துள்ள நிலையில், பதவியேற்கப் போகும் புதிய ஜனாதிபதி சூழ்நிலையின் கைதியாச் செயற்படவேண்டிய கட்டாயம் உள்ளது.

இதனை இல்லை என எவரும் நினைக்கலாம். ஆனால் காலம் இதனை சரியென்று உணர்த்தவே போகிறது.

எல்லோரும், தொடர்ந்து சமாதானம் பற்றிப்பேசிக் கொண்டு அமைதியை குழப்பும் நகர்வுகளையே எப்போதும்போல மெற்கொள்வார்கள். இதில் ஏமாறப் போவது தமிழினமாக இருக்கக்கூடாது என்பதையே சமகால நிகழ்வுகள் அனைத்தும் வலியுறுத்திநிற்கின்றன.

எனவேதான், தேர்தல் நாள் தமிழ் மக்களால் முன்னெச்சரிக்கையுடன் கரிநாளாக அனுஷ்டிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பரவலாக சகல தரப்பினரிடமிருந்தும் எழுந்துள்ளது.

இது கரிநாளாக இருக்கலாம். இது துக்கதினமேயல்ல. இதில் துக்கப்பட எதுவுமில்லை. நாம் ஏமாறப்போவதுமில்லை. ஏமாற்ற எவரையும் அனுமதிக்கவும் போவதில்லை என்ற உறுதிப்பாட்டிலேயே தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போகிறோம் என தமிழ்மக்கள் நினைப்பதில் நியாமுண்டு.

ஏமாந்தால் - வாக்களித்து விட்டு - ஏன் வாக்களித்தோம் என வருந்தினால்த்தானே துக்கம்.

தமிழ் மக்கள் இனிமேலும் சிங்களத் தலைமைகளிடம் ஏமாறப்போவதில்லை என முடிவெடுத்தபின் துக்கமேது?


267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## மாவீரர் நாள் நவம்பர் – 27.2005

"ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல; அந்தச் சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்து விடுவதில்லை. இந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச் சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கிறது. ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி விடுகிறது".

- தமிழீழத் தேசியத் தலைவர் -

## நாடும் நடப்பும்




# தமிழர்களின் அபிலாஷையை நிறைவேற்றாத பேரினவாதிகளின் தேர்தலை பகிஷ்கரிப்போம்!

## யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தல் மூலம் பெற்றி பெற்று ஆட்சியமைக்கும் எந்த சிங்கள அரசியல் தலைவர்களும் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷையை நிறைவேற்றப் போவதில்லை என்பது கடந்தகால அரசியல் தலைவர்களின் - தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் நடவடிக்கையில் இருந்து தெளிவுபடுத்துகின்றன. எனவே, இந்த நிலையில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காத ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்போம் என யாழ். குடாநாட்டு பொது அமைப்புக்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கோரி வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

### வெண்மை வாணிப உரிமையாளர் சங்கம்

பேரினவாத அரசுகளும் அதன் தலைவர்களும் காலம் காலமாக தமிழினத்தையும், தமிழர் உரிமைகளையும், தமிழர் தேசத்தையும் அழித்து வந்துள்ளார்கள். ஆட்சிக்கு வருவதற்காகவும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகவும் தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மீண்டும் மீண்டும் ஏமாற்றப் பார்க்கின்றார்கள். பண்டார நாயக்கா காலம் தொடக்கம் ஜயவர்த்தன காலம் முதற்கொண்டு சிங்களத் தலைவர்கள் தமிழினத்திற்கு இழைத்த கொடுமைகள் சொல்லில் அடங்காதவை.

ஜனாதிபதியாக இந்த நாட்டில் எவர் வந்தாலும் எமக்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை. அதற்குச் சான்றாக தமிழ் விரோத சக்திகளும், தேச விரோதிகளும் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள்.

எனவே, எந்தப் பயனையும் தராத இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒட்டு மொத்தத் தமிழரும் அடியோடு புறக்கணிப்போம். அந்த நாளை துக்க தினமாக அனுஷ்டிப்போம்.

### தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

ஜனாதிபதித் தேர்தலை தமிழீழ தேசிய மக்கள் புறக்கணிப்பது உறுதியாகிவிட்டது. இந்தத் தேர்தலின் இருந்து சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ் பேசும் மக்களுக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை. இதனூடாக விடிவு கிடைக்கப் போவதில்லை என்ற தெளிவு தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

அரசாங்கத்தினாலும், படையினராலும், ஒட்டுமொத்த தேச விரோதக் கும்பல் ஈ.பி.டி.பியினராலும் புதிய நயவஞ்சக தூண்டில் போட்டு பார்க்கிறார்கள். புதிய ஒரு வழியைக் கையாண்டு கடந்த வாரம் தொழில் வாய்ப்புத் தருவதாக இழுத்துச் செல்லப்பட்டவர்களை இந்தத் தேர்தலில் பயன்படுத்துவதற்கு முனைந்துள்ளார்கள். எந்த ஒரு தமிழ் மக்களும் இந்த ஏமாற்று சதி வலையில் சிக்க மாட்டார்கள். வரலாற்றில் இவ்வாறான தவறை விடமாட்டார்கள். எனவே ஈ.பி.டி.பியினரின் இந்த வஞ்சக வலையில் விழவேண் டாம். இந்தப் பரிதாபத்திற்கு உரியவர்களால் - மகிந்த ராஜபக்ஷவிற்காக வேலை செய்தால், வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக நப்பாசை ஊட்டப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பொய்மைகளுக்கு எடுபட வேண்டாம் என தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கேட்டுக் கொள்கின்றது.

### தமிழ் மாணவர் ஒன்றியம்

காலங்காலமாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் பேரின அரசுகளிடம் எம்மினம் ஏமாந்து வந்தது வரலாறு. நாம் எப்போதுமே நம்பிக் கெட்டு வரும் இனமாகவே வாழ்ந்து வருகிறோம். ஜனநாயக வழியில் எமது முன்னாள் தலைவர்கள் பல வழிகளிலும் ஆட்சி புரிவோரோடும் இணங்கிப்போய் விட்டுக்கொடுத்து அணுகிய போதெல்லாம் கூட, எம் இனத்தின் உரிமைகளை நியாயாமான தேவைகளையெல்லாம் வழங்காமல் ஏய்த்து வந்திருக்கின்றன பேரினவாத அரசுகள்.

இத்தகைய ஏமாற்றும் வஞ்சகமுமே, யுத்தத்தை தீர்வுக்குரிய பாதையாகத் தேர்ந்தெடுக்குமாறு எம் இனத்தை தூண்டியது. யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டது. ஏறத்தாழ 25 வருடங்கள் நாம் அனுபவித்த துயரங்கள் யாரும் அறியாததல்ல. இழப்புக்கள் எவருக்கும் தெரியாததல்ல.

சமாதானத்துக்கான யுத்தம் என்னும் முரண்நிலைச் சித்தாந்த அணுகுமுறை தோல்வி கண்டபின், சமாதானத்திற்கான நேசக்கரம் பேரினவாத அரசினால் நீட்டப்பட்ட போது - அடிப்படையான பொது நியாயத்தின்பால் உள்ள நம்பிக்கையில் நாம் பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றை எட்டமுடியும் என நம்பினோம். தீர்வுக்கான விளிம்பை எட்டுவது போல் பாவனை காட்டி நீண்ட காலங்கள் இழுத்தடிக்கப்பட்டதும், பின்னர் பேரினவாத ஆட்சியாளர்களின் முரண்பாட்டினால் நிலைமை மேலும் மோசமாக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே. சமாதானத்துக்குத் தயாராவதுபோல ஒரு சிரித்த முகத்தை எமக்குக் காட்டிக் கொண்டே, திரை மறைவில் எமது போராட்டத்தை நசுக்கவும், உட்பூசல்களைத் தூண்டி எம்மைப் பலவீனப்படுத்தவுமே பேரின அரசு முயன்றுள்ளது. பல வகையான அரசியல் தகிடுதத்தங்களுக்குப் பின்னர் அரசின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

எனவே, எம்மினிய மக்களே யோசியுங்கள்! கடந்த கால அனுபவங்களையும், அரசியல் நாடகங்களையும் அறியாதிருக்க நாம் படிப்பறிவில்லாத சிந்தனையற்ற ஆட்டு மந்தைகள் அல்ல. இந்தத் தேர்தலில் எமக்கு எவ்வித பற்றும் இல்லை. எனவே முழுமையாக இந்தத் தேர்தலைப் புறக்கணிப்பதே எமது உணர்வுகளை அரசுக்கும் சர்வதேசத்துக்கும் புரியவைக்க ஒரேயொரு வழிமுறையாகும்.

### எம்.ஜி.ஆர்.முன்னேற்றக் கழகம்

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறிய சிங்கள ஆட்சியாளர்களின் தலைமைத்துவம் தமிழர்களுக்குத் தேவையில்லை. தாயகத்திலே தமிழர்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான உயர்பாதுகாப்பு வலயங்களை அமைத்து விட்டு, அவ்வலயத்துக்குள்ளேயே வந்துநின்று தமிழர்களிடம் வாக்குக் கேட்பதற்கு அவர்களுக்கு எத்தகைய துணிவு?

தன் மகனை மதிக்காத தலைவாசலை தலையே போனாலும் தாயொருத்தி மிதிக்க மாட்டாள். தமிழ்த் தாய் தாலாட்டிச் சீராட்டிப் பாலூட்டி வளர்த்தெடுத்த தன் செல்லக் குழந்தையாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே இந்தத் தேர்தலில் அக்கறைப்படாது ஒதுங்கி நிற்கும்போது அவர்களை ஈன்றெடுத்த தாய்மாரான தமிழ் மக்கள் எத்தகைய தூரம் அக்கறைப்படுவர்.

நடைபெறப்போகும் தேர்தலைப் பகிஷ்கரித்து அன்றைய தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து தமிழர் தாயகத்தின் உண்மை நிலைகளை உலகறியச் செய்வோம். ஒன்று பட்ட மக்களாய் நின்று எமது விடுதலையை விரைவுபடுத்துவோம்.

### யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்


நாளை நடைபெறப்போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டி போடும் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் பதவிக்கு வந்து தமிழ் மக்களாகிய எங்களுக்கு எதுவிதமான நல்ல தீர்வையும் தரப் போவதில்லையென்பதால் தமிழ் மக்களாகிய நாம் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன்மூலம் சர்வதேச சமுகத்துக்கு தமிழ் மக்களாகிய எங்கள் எதிர்ப்பினை எடுத்துக் காட்டலாம்.

இதன் மூலம் பேரினவாதிகளின் முகத் தோற்றத்தையும் வெளியுலகுக்கு கொண்டும் வரலாம்.

# “ஜனாதிபதித் தேர்தல் ஒருபுறம் அக்கறையின்மை மறுபுறம்”

**தமிழீழ விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வந்துள்ள நெகிழ்ச்சிப் போக்கானது சமாதானத் தீர்வு குறித்த சர்வதேசக் கருத்துக்களைப் புலிகள் அனுசரித்து வந்ததன் வெளிப்பாடே என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்! சர்வதேச வலைப் பின்னலில் புலிகள் சிக்குண்டு விட்டார்கள் என்ற பொய்ப் பரப்புரை நெடுங்காலம் நிலைத்து நிற்காது.**





நவம்பர் மாதம் பதினேழாம் திகதியன்று நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டங்கள் ஒருவாறாக ஓய்ந்து போயுள்ளன. ஜனாதிபதித் தேர்தலுக்குரிய முக்கிய வேட்பாளர்களான பிரதமர் ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், கொடுத்த கொள்கை விளக்கங்களாலும், அள்ளி வழங்கிய வாக்குறுதிகளாலும் குழம்பிப் போயுள்ள சிங்கள மக்கள் தங்களுடைய தீர்ப்பையும், தங்களுக்கான தீர்ப்பையும் நவம்பர் பதினேழாம் திகதியன்று வழங்கப் போகிறார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் தங்களுடைய தீர்ப்பையோ, அல்லது தங்களுக்கான தீர்ப்பையோ வழங்குவது குறித்து பெரிதாக ஆர்வம் எதையும் காட்டிக் கொள்ளவில்லை என்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது. நடந்து முடிந்துள்ள தபால் மூலமான வாக்குப் பதிவும் இதனைத்தான் சுட்டிக் காட்டுகின்றது. யாழ்.வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லாத வகையில் பத்து வீதத்திற்கும் குறைவாகவே தபால் மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடையவர்கள் பலர் விண்ணப்பிக்கவில்லை என்றும் விண்ணப்பித்திருந்தவர்களில் பெரும்பான்மையானோர் வாக்களிக்காமல் புறக்கணித்துள்ளார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே வேளை தபால் மூலம் வாக்களித்த பலரும் தாம் யாருக்கும் வாக்களிக்கவில்லை என்றும், தமது வாக்குகளைச் செல்லாத வாக்குகளாக்கி விட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்த ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று பல தரப்பாலும் வேண்டுகோள்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசிய ஒற்றுமை ஒன்றியம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கோரிவருகின்றார்கள். சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அக்கறை செலுத்த வேண்டியதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தெரிவித்துள்ளார்கள். ஜனாதிபதித் தேர்தல் குறித்தோ, அல்லது தேர்தலில் வாக்களிப்பது குறித்தோ தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளவில்லை என்று ஊடகங்களும் கருத்து வெளியிட்டுள்ளன.

சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் குறித்துத் தமிழ் மக்கள் பெரிதாக அக்கறை கொள்ளாததற்கு தகுந்த காரணங்கள் இருக்கின்றன. சிங்களத்தின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் இதுவரை முறையான சமாதானத் தீர்வு எதையும் முன வைக்கவில்லை. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குரிய தீர்வு சிக்கலடைந்து போனதற்கு சிங்களத்தின் இந்தப் பிரதான கட்சிகளே காரணமுமாகும். தமிழ் மக்களை வெறும் வாக்கு வங்கிகளாக மட்டுமே கருதித்தான் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் செயற்பட்டு வந்துள்ளன. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையையும், நாளாந்த வாழ்வியல் பிரச்சனையையும் தீர்ப்பதற்குரிய திட்டங்கள் குறித்து எந்தவிதமான தெளிவான பரப்புரைகளையும் சிங்கள மக்களிடையே இந்தக் கட்சிகள் முன்வைக்கவில்லை. மாறாக சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளைத்தான் மக்களிடையே இந்தப் பிரதான கட்சிகள் விதைத்து வருகின்றன. தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படக் கூடாது என்பதற்காக சிங்கள மக்களின் நலனைக்கூடக்காவு கொடுக்கும் செயலைத்தான் இந்த பேரினவாதக் கட்சிகள் செய்து வருகின்றன. நிலைமை இவ்வாறாக இருக்கையில், தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை காட்டாததில் ஆச்சரியம் என்ன இருக்கமுடியும்?

சமாதானம் ஊடாகத் தீர்வு ஒன்று வரவேண்டும் என்றால் அதனைத் தீர்மானிக்கின்ற சக்தியும், பொறுப்பும் சிங்கள மக்களிடம்தான் இருக்கின்றது. சமாதானம் ஊடாக தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையையும், நாளாந்த வாழ்வியல் பிரச்சினையையும் தீர்க்கக் கூடிய தீர்வு ஒன்றை தீர்மானித்து அதற்குரிய தீர்ப்பை வழங்க வேண்டியது சிங்களத் தேசமே. ஏனென்றால, அதற்குரிய தீர்ப்பை ஏகமனதாக ஏற்கனவே தமிழ்த்தேசம் வழங்கி விட்டது.

**சமாதானம் ஊடாகத் தீர்வு ஒன்று வரவேண்டும் என்றால் அதனைத் தீர்மானிக்கின்ற சக்தியும், பொறுப்பும் சிங்கள மக்களிடம்தான் இருக்கின்றது. சமாதானம் ஊடாக தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையையும், நாளாந்த வாழ்வியல் பிரச்சினையையும் தீர்க்கக் கூடிய தீர்வு ஒன்றை தீர்மானித்து அதற்குரிய தீர்ப்பை வழங்க வேண்டியது சிங்களத் தேசமே. ஏனென்றால், அதற்குரிய தீர்ப்பை ஏகமனதாக ஏற்கனவே தமிழ்த்தேசம் வழங்கி விட்டது.**

நாம் இதனைக் கூறுகின்ற இவ்வேளையில், இக்கருத்துக் குறித்துச் சில கேள்விகள் எழுவதும் நியாயமே! சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை காட்டாத தமிழ் மக்கள், சிறிலங்காவின் கடந்த பொதுத் தேர்தலில் அக்கறை காட்டியதோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏகமனதாகத் தெரிந்தெடுத்துப் நாடாளுமன்றம் அனுப்பியது ஏன்? என்று எழக்கூடிய வினாவிற்கு நாம் விடையளித்தாக வேண்டும்.

சிறிலங்கா அரசியல் யாப்பும், அதன் ஜனநாயக மரபும் தமிழ் மக்களுக்கு எதிராக உள்ளன என்பது உண்மைதான். ஆனால், சிங்களத் தலைமைகள் மட்டும் போட்டியிட்டு வெல்லக்கூடிய ஜனாதிபதித் தேர்தல்போல் அல்ல நாடாளுமன்றத் தேர்தல். தமிழ் மக்களின் சரியான பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் சிங்கள பேரினவாதிகளால் நியமிக்கப்படும், தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தாத ‘தமிழர்களை’, ‘தமிழர்களின் பிரதிநிதிகள்’ என்று சிங்கள அரசுகள் பொய்மைப் பரப்புரை செய்து வந்திருந்தன. சர்வதேச நாடுகளை நோக்கி இந்தப் பொய்மைப் பரப்புரைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெரிவும், அதன் பங்களிப்பும் தமிழ் தேசியத்தின் கருத்துருவாக்கத்திற்கு வலுச்சேர்த்ததோடு சிங்கள அரசின் பொய்ப்பரப்புரையையும் உடைத்தெறிந்தது.

ஆனால், சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலின் குணாதிசயங்களைக் கொண்டது அல்ல. இது ஒப்பீட்டளவில் சிங்களத்தின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையே நடைபெறக்கூடிய தேர்தலாகும். சிங்களத்தின் இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையே அதன் வேட்பாளர்களான இரண்டு சிங்கள பௌத்த அரசியல்வாதிகளுக்கு இடையே நடைபெறுகின்ற தேர்தல் தான் சிறிலங்காவின ஜனாதிபதித் தேர்தல். இதில் தமிழ் மக்கள் என்பவர்கள் வெறும் வாக்கு வங்கிகள் தான்.

தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை கொள்ளாமல் போவதற்கு மேற்சொல்லப்பட்ட அழுத்தமான காரணங்களோடு வேறு பல காரணங்களும் உண்டு. சிறிலங்காவின் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில தினங்களுக்குள் நடைபெறவுள்ள இவ்வேளையில், சில முக்கியமான கருத்துக்களை தர்க்கிப்பது பொருத்தமானதாக இருக்கக்கூடும்.

தமிழீழ மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வெளிப்படையாகவே ஊக்கி வந்துள்ள சிறிலங்கா சுதந்திரகட்சியின் வேட்பாளரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் வெளிப்படையாகவே சிங்கள பௌத்த பேரினவாத சிந்தனைகளை நசுக்கி வருவதை நாம் இப்போது காண்கின்றோம். நாம் முன்னர் கூறி வந்திருப்பதைப் போல மகிந்த ராஜபக்ஷ ஐம்பது ஆண்டு காலத்திற்குப் பின்னால் பயணம் செய்து சிங்கள பேரினவாதத்தின் அடிவேரை அடிவருட ஆரம்பித்துள்ளார். கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தமிழர் தாயகம், கூட்டாட்சி, அதிகாரப் பகிர்வு என்பவற்றையெல்லாம் மகிந்த ராஜபக்ஷ முற்றாக எதிர்த்தும் வருகின்றார். அதுமட்டுமல்லாது தேர்தல் பரப்புரைகளின்போது முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருவதானது, அவருடைய அரசியல் தெளிவின்மையை மட்டுமல்லாது எந்த விதத்திலாவது ஜனாதிபதித் பதவியை கைப்பற்றி விடவேண்டும் என்கின்ற மூர்க்கத்தையும் வெளிப்படுத்தி வருகின்றது.

தேர்தலில் வெற்றி பெறுவதற்காக மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு பேசிவருகின்றார். தேர்தலில் வெற்றி பெற்ற பின்பு மகிந்த ராஜபக்ஷ சற்று இறங்கி வந்து சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுவார் என்பது போன்ற அபத்தமான கருத்துக்களையும் நாம் இப்போது கேட்க வேண்டியதாக உள்ளது. ‘சமாதானம்’ என்று பேசிப் பதவிக்கு வந்த இவரது முன்னோடிகளே பின்னர் சமாதானத்திற்கான(?) போரை ஆரம்பித்தவர்கள் என்னும் போது சமாதானத்திற்கான அடிப்படைக் கோட்பாடுகளையே எதிர்த்து வருகின்ற மகிந்த ராஜபக்ஷ ‘எந்தளவுக்கு’ இறங்கி வருவார் என்பதே நாம் வைக்கக் கூடிய தர்க்கமாகும்!

ஆகவே மகிந்த ராஜபக்ஷவின் கருத்துக்களும் கொள்கைகளும் எண்ணங்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. ஒரு வெளிப்படையான எதிரி அவர்.!

ஆனால் சிறிலங்காவின் முன்னால் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் மற்றும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் குறித்துத் தான் தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். இவர் குறித்து கடந்த மூன்றாண்டு காலமாக நாம் தெரிவித்து வந்த கருத்துக்களும், எச்சரிக்கைகளும் இன்று 2005 ஆம் ஆண்டு நிரூபணமாகி இருப்பதையும் நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் குறித்து நாம் தெரிவித்து வந்த கருத்துக்களுக்கு எதிர்வினையாக வந்த கருத்துக்கள் புலம் பெயர்ந்த சில தமிழர்களிடமிருந்தும், குறிப்பிட்ட சில தமிழ் ஊடகங்களிலிருந்தும் வந்தவை என்பதையும் நாம் பல தடவைகள் குறிப்பிட்டே வந்துள்ளோம். இவர்கள்மீது குற்றம் சாட்டுவதற்காக நாம் இன்றைய தினம் இதைச் சொல்லவில்லை. இவர்களையெல்லாம் ஒரு விதமான மயக்கத்தில் வைத்திருப்பதில் ரணில் விக்கிரமசிங்க எவ்வளவு வெற்றி பெற்றிருந்தார் என்பதனையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த வேளையில் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரச தரப்பில் மிக முக்கிய பங்கினை வகித்தவருமான மிலிந்த மொறகொட வெளியிட்டுள்ள விடயங்கள் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கலாம். ஆனால் அது எமக்கோ அல்லது எமது நேயர்களுக்கோ அதிர்ச்சி எதையும் தரப்போவதில்லை.

**‘அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டு விடுதலைப் புலிகளின் வர்த்தக கப்பல்களை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அழித்தோம். விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் பிளவினை உருவாக்கினோம். விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சர்வதேச பாதுகாப்பு வலயத்தினுள் சிக்கவைத்துள்ளோம். விடுதலைப் புலிகளை சர்வதேச வலைப்பின்னலில் சிக்க வைத்துள்ளோம்.’ என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளின்போது முக்கிய பங்கினை வகித்தவருமான மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.**

ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அரசியல் வாழ்க்கையில் அவர் முன்னெடுத்த செயற்பாடுகள் குறித்தும் அவருடைய அரசியல் நேர்மை குறித்தும் கீழ் வரும் சம்பவங்கள் சந்தேகங்களையும் எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

❋ **அதிகாரப் பரவலாக்கலையும், கூட்டாட்சி முறையையும் தமிழர் தேசியக் கோட்பாட்டையும் கருத்துருவாக்கத்திலாவ்து ஓரளவுக்கு ஏற்றுக்கொண்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தவர்தான் இந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள்.**

❋ **சந்திரிகா அம்மையார் முதல் முறையாக ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர் கொண்டு வந்த முதலாவது தீர்வுத் திட்டத்தை வன்மையாக எதிர்த்தவர்தான் இந்த ரணில் விக்கிரமசிங்க. அது மட்டுமல்ல சந்திரிகா அம்மையாரின் இந்த தீர்வுத் திட்டத்தின் நகலை அன்று நாடாளுமன்றத்தில் வைத்து எதிர்த்தவர்களும் இவரது ஐக்கிய தேசியக்கட்சினர்தான்.!**

❋ **எந்தவிதமான உருப்படியான பயனையோ பலனையோ தமிழர் தேசத்திற்குத் தராமல் சமாதானப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்துக் கொண்டு போன சாதனையை செய்தவரும் இதே ரணில் விக்கிரமசிங்கதான்.**

❋ **தற்போது அவசரகால சட்டத்தை சந்திரிகா அம்மையார் மூன்று முறை நீடித்தபோதும், அதற்கு ஆதரவு அளித்தவரும் இதே ரணில் விகிரமசிங்கதான்.**

இப்போதுகூட தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து ஒரு தெளிவான திட்டத்தை தருவதற்கு ரணில விக்கிரமசிங்க விரும்பவில்லை. மாறாக தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை காட்டப் போவதில்லை என்று தெரிந்தவுடன் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக சில உண்மைகளை மிலிந்த மொறகொட ஊடாக கசிய விட்டிருக்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது மிக முக்கியமான பங்கினை வகித்தவரும் சர்வதேச அரங்கில் பல செயற்பாடுகளை செய்து கொண்டு வெளிநாடுகளின் பாராட்டுகளைப் பெற்றவருமான மிலிந்த மொறகொட அவர்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலின் கடைசிக்கட்ட வேளையில் ஓர் ஒப்புதல் வாக்கு மூலத்தை(?) அளிக்க வேண்டிய கட்டாயம் என்ன?

கடும்போக்குடைய சிங்கள பொதுமக்களின் வாக்குகளைப் பெற்று ரணிலின் நிலையைச் சமன் செய்யும் காரியம்தான் மிலிந்த மொறகொடவின் ஒப்புதல் வாக்குமூலம்!

மிலிந்த மொறகொட கொடுத்துள்ள ஒப்புதல் வாக்குமூலம்தான் என்ன?

‘அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டு விடுதலைப் புலிகளின் வர்த்தக கப்பல்களை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அழித்தோம். விடுதலைப் புலிகளின் இயக்கத்தில் பிளவினை உருவாக்கினோம். விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சர்வதேச பாதுகாப்பு வலயத்தினுள் சிக்க வைத்துள்ளோம். விடுதலைப் புலிகளை சர்வதேச வலைப்பின்னலில் சிக்க வைத்துள்ளோம்.’ என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளின்போது முக்கிய பங்கினை வகித்தவருமான மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அடிப்படை உண்மைகள் குறித்தோ அல்லது உண்மையற்ற வீரப்பிரதாபங்கள் குறித்தோ இப்போது நாம் தர்க்கிக்க முன்வரவில்லை. மாறாக மீண்டும் சொல்ல வருவது இதுதான்.!

தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தல் குறித்து அக்கறை கொள்ளப் போவதில்லை என்று தெரிந்த உடன் தனது சுயரூபத்தை ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தி விட்டார் என்பதேயாகும். அவர் இப்போது கடும்போக்குச் சிங்கள மக்களின் வாக்குக்காக அலைய வேண்டியநிலை. அதனைத்தான் மிலிந்த மொறகொடவின் திடீர் ஒப்புதல் வாக்குமூலம் மறைமுகமாக காட்டி நிற்கின்றது.

இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஒரு விடயத்தை முக்கியமான விடயத்தை மட்டும் சுமுகமாகத் தர்க்கிக்க விரும்புகின்றோம். அது சர்வதேச வலைப்பின்னல் என்கின்ற விடயம் பற்றியதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர்களது போராட்டத்தையும் சர்வதேச வலைப்பின்னலில் சிக்க வைத்துள்ளோம் என்று மிலிந்த மொறகொட கூறியுள்ளார். சிங்கள மக்களின் அதுவும் கடும் போக்கு சிங்கள மக்களின் வாக்குகளைக் கவர்வதற்காக இவ்வேளையில் இவ்வாக்குமூலம் கொடுக்கப்பட்டுள்ளபோது இச் சொல்லாடலின் கருத்துக் குறித்து நாம் சில தர்க்கங்களை முன்வைக்க விரும்புகின்றோம்.

சமாதானத்தீர்வு குறித்த சர்வதேசக் கருத்தை அனுசரித்துப் போவது வேறு. சமாதானத்தீர்வு குறித்த சர்வதேச வலைப் பின்னலில் விழுவது என்பது வேறு. இவை இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு உரிய தீர்வை சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாகத் தீர்த்துக் கொள்வதற்கு சர்வதேச சமூகம் வைக்க கூடிய கருத்துக்களை அனுசரிக்கலாம். ஆனால் மிலிந்த மொறகொட கூறுவதுபோல் சமாதானத்தீர்வு என்ற கருத்துருவாக்கத்தின் ஊடாக போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் வலைப்பின்னல் உருவாக்கப்பட்டால் அது சமாதானத்தீர்வு என்ற கருத்துருவாக்கத்தை ஆட்டம் காணப் பண்ணிவிடும்.

தவிரவும், அப்படி ஒரு சர்வதேச வலைப்பின்னலை சிங்கள தேசம் உருவாக்குமானால் அதற்குள் சிக்குவதற்கு புலிகள் ஒன்றும் எலிகள் அல்ல!.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடைப்பிடித்து வந்துள்ள நெகிழ்ச்சிப் போக்கானது சமாதானத் தீர்வு குறித்த சர்வதேசக் கருத்துக்களைப் புலிகள் அனுசரித்து வந்ததன் வெளிப்பாடே என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்! சர்வதேச வலைப் பின்னலில் புலிகள் சிக்குண்டு விட்டார்கள் என்ற பொய்ப் பரப்புரை நெடுங்காலம் நிலைத்து நிற்காது.

ஒரு மிகமுக்கியமான விடயத்தை இவ்வேளையில் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். சமாதானத்தீர்வு என்பதனை தொடர்ந்தும் தேவையற்று இழுத்தடித்துக்கொண்டே போனால் அது சமாதானத்திற்கே ஆபத்தை உருவாக்கி விடும்! அப்படி ஏதும் நேராமல் நேர்மையான விடயங்கள் நடைபெற வேண்டும் என்பதுவே எமது எதிர்பார்ப்புமாகும்!. இதுவே ஜனாதிபதித் தேர்தல் வேளையில் நாம் சொல்லக்கூடிய அக்கறையான கருத்துமாகும்.

**சபேசன்**
**(அவுஸ்ரேலியா)**

# நட்வர்சிங் மீதான குற்றச்சாட்டுக்கள் நிருபணமானால் கடும் நடவடிக்கை

## சோனியாகாந்தி தெரிவிப்பு

புதுடெல்கி —

நட்வர்சிங் மீது வோல்கர் குழு கூறிய குற்றச் சாட்டுக்கள் உண்மையானால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சோனியாகாந்தி கூறியுள்ளார்.

டெல்கியில் ஒரு பத்திரிகை சார்பில் நடந்த விழாவில் கலந்துகொண்டு சோனியா காந்தி பேசினார்.

பின்னர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது -

உணவுக்கு எண்ணை திட்டத்தின்கீழ் ஊழல் நடந்ததாக வோல்கர் கமிட்டி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதில் புகார் கூறப்பட்டுள்ள நட்வர் சிங்கை பாதுகாக்க நான் முயற்சிப்பதாகக் கூறுவதில் எந்த ஆதாரமும் இல்லை. யாரையும் பாதுகாக்க நாங்கள் விரும்பவில்லை.

வோல்கர் குழுவால் கூறப்பட்டுள்ள புகார்கள் குறித்து விசாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் முடிவை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

வோல்கர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மையானால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விசாரணைக் குழு அமைக்கப்பட்டதை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த விசாரணையின் மூலம் உண்மைகள் வெளிவரும். யாரையும் பாதுகாக்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபடமாட்டோம்.

இந்த விவகாரத்தில் காங்கிரசின் பெயரை இழுத்திருப்பது எனக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இது மன வேதனை அளிக்கிறது. காங்கிரஸ் கட்சியின் பெயரை சிலர் தவறாகப் பயன்படுத்தி இருக்கக்கூடும். அப்படி இருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். நட்வர் சிங் விவகாரத்தில் எனக்கும் மன்மோகன் சிங்குக்கும் இடையே மோதல் எதும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.



# ஜப்பானில் நேற்று நிலநடுக்கம்

டோக்கியோ —

ஜப்பான் - பூகம்ப ஆபத்து அதிகம் உள்ள பகுதியிலும், புவி தட்டுகள் அடிக்கடி நகரும் இடத்தில் இருப்பதாலும் அங்கு அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில். ஜப்பானில் உள்ள ஹொகேடோ மற்றும் தொகாக்கு பகுதிகளில் நேற்று திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 6.39 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.8 ஆகப் பதிவானது. இதனால் இந்தப் பகுதியில் உள்ள வீடுகள் அதிர்ந்தன.


ஏற்கனவே இதே ஹொகேடோ பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் - நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் 6.8 ரிக்டர் அளவில் கடலுக்கு அடியில் ஏற்பட்டுள்ளதால் சுனாமி பேரலைகள் எழக்கூடும் என்று ஜப்பான் புவியியல் மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பசுபிக் கடலில் - இந்தப் பகுதியில் 50 செ.மீ. உயரத்துக்கு அலைகள் உருவாகி பல ஊர்களுக்குள் கடல்நீர் புகும் அபாயம் உள்ளது என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் குறித்து இது வரை தகவல் ஏதும் வெளியாகவில்லை.

## உலக நோக்கு

# பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள ஹோட்டல்முன் கார்க் குண்டுவெடிப்பு!

## மூவர் பலி; 15 பேர் காயம்



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஹோட்டல் ஒன்றின் முன்னால் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் குறைந்தது மூவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 15 பேர் காயமடைந்தனர்.

நேற்றுக்காலை இடம் பெற்ற இந்தத் தாக்குதலில் அப்பகுதியிலிருந்த வார்த்தக நிலையங்கள், வாகனங்கள் என்பன தீப்பிடித்து நாசமாகின.

ஹோட்டலுக்கு வெளியேயுள்ள கார் தரிப்பிட நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு றிமோட் கொன்ட்ரோல் மூலம் வெடிக்க வைக்கப்பட்டதாக கராச்சி பொலிஸ் அதிகாரி முசாக்ஷா தெரிவித்தார்.


இந்தக் குண்டுவெடிப்பில் இரண்டு படையினர் உயிரிழந்ததுடன், மற்றொருவர் வைத்தியசாலையிலும் உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் ஐவரின்நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூர் மக்களின் தகவல்களின்படி ஆறுபேர் இந்தக் குண்டுவெடிப்பில் உயிரிழந்ததாக தெரிவித்த போதிலும் பொலிஸாரும், பாகிஸ்தான் அரசாங்க பேச்சாளரும் இதனை மறுத்துள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்பை பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் ஷேக் ரஷீத் அகமட் வன்மையாக கண்டித்துள்ளார். பாகிஸ்தானின் எதிரிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தாம் எதிர்பார்த்த அளவு உதவிகளை சர்வதேச சமூகம் வழங்கவில்லையாம்

## பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கவலை



வொஷிங்டன் —

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு சர்வதேச நாடுகள் நியாயமான உதவிகளை வழங்கின. இருப்பினும் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு எங்களுக்கு உதவிகள் கிடைக்கவில்லை என்று பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறியுள்ளார். சி.என்.என். தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் முஷாரப் கூறியதாவது -

பாகிஸ்தானில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க மருத்துவ உதவிகள், மருத்துவக் குழுக்கள், கள மருத்துவ மனைகள், மருத்துவ உபகரணங்கள், போர்வைகள், தற் காலிக கூடாரங்கள், உணவுப்பொருட்கள் என சர்வதேச நாடுகள் வழங்கிய உதவிகள் எங்களது தேவையைப் பூர்த்தி செய்தன. இதனால் இவற்றை நியாயமான உதவிகள் என்று கூறலாம். இருப்பினும் தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சீரமைக்கும் பணி நடந்து வருகிறது.

இந்தச் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள இதுவரை கிடைத்துள்ள உதவிகள் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. ஐ.நா.சபை, உலக வங்கி மற்றும் சர்வதேச நாடுகள் இது வரை மொத்தமாக ரூபா 22 ஆயிரத்து 950 கோடி அளித்துள்ளன. இதில் 15 ஆயிரத்து 750 கோடி மறுகட்டமைப்பு பணிகளுக்காகவும், ரூபா ஆறாயிரத்து 750 கோடி வரும் ஓராண்டு காலத்தில் மேற்கொள்ளப்படும் நிவாரண உதவிகளுக்காகவும் செலவிடப்படவுள்ளன. இது தவிர, மறுசீரமைப்புப் பணிகளுக்காக ரூபா 450 கோடி மேலும் தேவைப்படுகிறது. இதற்கு எம்மிடம் எவ்வித நிதியும் இல்லை. எதிர்வரும் 19 ஆம் திகதி பாகிஸ்தானில் ஒரு மாநாட்டை நடத்த உள்ளோம். இதில் எங்களுக்கு தேவையான நிதி உதவிகள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதில் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம்.

தீவிரவாதத்துக்கு எதிரான எங்களின் நடவடிக்கை காரணமாக கடந்த ஒரு ஆண்டு காலத்தில் பாகிஸ்தானில் எந்த ஒரு தீவிரவாத தாக்குதலும் நடைபெறவில்லை எனத் தெரிவித்தார்.

# தாயகக் கோட்பாட்டை நிராகரித்தால்...

இரு கட்சிகளுடனான எமது அனுபவங்களின் அடிப்படையில் அனைவரும் தமிழ்த்தேசிய இனப்பிரச்சினை பற்றி வாக்குகளுக்காகத் தான் பேசுகிறார்கள். தேர்தலுக்குப் பின்னால் அதை கருத்தில் எடுக்காது விட்டுவிடுகிறார்கள்.

இது விடயத்தில் அகற்றையற்று இருப்பது தான் அவர்களது வழமையாக இருக்கிறது. தேர்தல் முடிவுகள் குறித்து மக்கள் கவலைப்பட வில்லை. இரு வேட்பாளர்களிடமும் எந்தவொரு வேறுபாட்டையும் மக்கள் பார்க்கவில்லை.

**கேள்வி** - ரணில் ஒரு சமாதானவாதி. மகிந்த ஒரு கடும்போக்கு நிலையை மேற்கொண்டுள்ளார் என்று வேறுபாடு அங்குள்ளதே?

**பதில்** - மகிந்தவினது செயற்பாடுகள் ஆபத்துகளை வெளிப்படையாகச் சொல்லுகின்றன. ஆனால் சமாதானவாதி என்று நீங்கள் சொல்லும் ரணிலைப் பொறுத்தவரை எமது அனுபவத்தில் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்காக அதிக சந்தர்ப்பங்கள் இருந்தும் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

எமது மக்கள் இன்று நம்பிக்கையற்று விரக்தி நிலையில் இருப்பதற்கு பொறுப்பானவர் என்றால் ரணில்தான் காரணம் என்பதில் சந்தேகமில்லை. அவர் எதையுமே செயற்படுத்தவில்லை.

கடந்த சில மாதங்களாக தமிழர் தாயகமெங்கும் மக்கள் நடத்திவரும் எழுச்சிப் பேரணிகளூடாக இதை நாம் பார்க்கிறோம். சிங்களத் தலைமைகள் மீது எம் மக்கள் முற்றுமுழுதாக நம்பிக்கையற்று இருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திய 1970 களின் நிலையை சிங்களத் தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் மக்கள் எழுச்சி கொண்டுள்ளார்கள். அது மக்களின் உணர்வுகள். எம்மால் அந்த உணர்வுகளைக் காயப்படுத்த முடியாது.

**கேள்வி** - மீண்டும் யுத்தத்துக்குத் திரும்பப் போவதாக நீங்கள் சொல்கிறீர்கள்?

**பதில்** - மக்களின் இந்த நிலையானது யுத்தத்தை நோக்கிச் செல்லும் என்று கண்டிப்பாக நாம் கூறமுடியாது. ஆனால் மக்களே நீதிபதிகள். எங்களுக்கு எம்மக்களே உத்தரவிடுகிறார்கள். அவர்கள் அண்மை மாதங்களாக ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்திவருகிறார்கள். அவர்களது எழுச்சிப்போராட்டங்களின் போது இராணுவத்தினரது வன்முறைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. மக்கள் சக்தியை இராணுவ ஒடுக்குமுறை மூலம் அளிக்க நினைத்தால் நிச்சயமாக அந்த மக்கள் ஜனநாயகப் பாதைக்கு எதிராக திரும்புவதைக் கட்டுப்படுத்த முடியாது. இத்தகைய செயற்பாடுகளைத் தான் அரசாங்கம் அதிகளவில் செய்துவருகிறது.

மக்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்தால் மக்களே ஆயுதங்களை ஏந்துவார்கள். அப்படியான நெருக்கடியான நேரங்களில் எமது தலைமைப்பீடம் மக்களுக்கு பின்னால் நிற்பதற்கு முடிவுசெய்யும். இராணுவ ஒடுக்குமுறைகளை உலகின் எந்தப்பகுதி மக்களும் சகித்துக்கொண்டிருக்கமாட்டார்கள் என்பது தான் வரலாறு சொல்லும் பாடம். ஒரு கட்டத்தில் அந்த மக்களின் எழுச்சியானது அவர்களது விடுதலையை மீட்டெடுப்பதில் வெற்றிபெறும்.

**கேள்வி**- மக்கள் வாக்களிப்பதைத் தீர்மானிப்பதில் நீங்கள் செல்வாக்கு செலுத்தமுயற்சிப்பதாக கூறப்படுகிறதே?

**பதில்** - அது தவறு. தமிழர் தாயகத்தின் எந்தப் பகுதிக்கும் நீங்கள் சென்று பார்க்கலாம் எம் மக்கள் தேர்தல் ஆர்வம் கொள்ளாதிருப்பதை. அவர்கள் புதிதாக எதையும் பார்த்துவிட வில்லை. அவர்கள் எந்த ஒரு புதிய நம்பிக்கையையும் பெற்றிருக்கவில்லை. ரணிலின் யாழ்ப்பாண பயணத்தைப் பார்த்தால் அவர் பலாலி இராணுவத் தளத்துக்கு சென்றார்.

அங்கு இராணுவத்தினர் மத்தியில் இராணுவத்தை நவீனமயமாக்கப் போவதாகவும், ஆயுதங்கள் வாங்கப்போவதாகவும் கூறியிருக்கிறார். அவர் தமிழ் மக்களைச் சந்திக்கவில்லை, அவர்களது குறைகளைக் கேட்கவில்லை. அப்படியானால் மக்களின் மனநிலையை நீங்கள் எண்ணிப்பாருங்கள்.

**கேள்வி**- ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை குறித்து?

**பதில்** - நுட்பமாக பார்த்தால் அது தடை அல்ல. எமது பிரதிநிதிகளுக்கான உத்தியோக பூர்வமான வரவேற்பை இடைநிறுத்தம் செய்து வைத்துள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் அரசாங்கத்துடன் இணைந்துள்ள இன்னொரு தரப்பாளர் நாங்கள். ஆனால் இலங்கை அரசின் அழுத்தத்தால் எம்மீது ஐரோப்பிய ஒன்றியம் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. அது எதிர்பாராதது.

கதிர்காமர் கொலையைப் பொறுத்தவரை குற்றவியல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் ஒரு தரப்பினரால் எம்மீது குற்றம்சாட்டப்படுகிறது.எம்மீது குற்றம் சொல்பவர்கள் எமக்கு விளக்கம் அளிக்கவோ, எம்மை கலந்தாலோசிக்கவோ இல்லை. எந்தக் கொலைகள் நடந்தாலும் விடுதலைப் புலிகளே செய்ததாக உடனே குற்றம் சாட்டுகிறார்கள். அரசாங்கமானது இந்தப் பொய்மைப் பண்டத்தை சர்வதேச சமூகத்துக்கு விற்பனை செய்கிறது. சர்வதேச சமூகமும் இதை வாங்கிக்கொள்வது எதிர்பாராத ஒன்று.

உண்மை ஒரு நாள் வெற்றி பெறும் ஐரோப்பிய சமூகமானது ஒரு ஜனநாயக ரீதியான சமூகம் என நாம் எண்ணுகிறோம். அவர்கள் ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளை தங்களது குடிமக்களாக அங்கீகரித்துள்ளார்கள். இந்த நாட்டினது ஒடுக்குமுறைகளை அவர்கள் பார்க்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் - இராணுவ இயக்கத்தினர். நாம் அரசியல் ரீதியான போராட்டங்களைத் தொடங்கினோம். இராணுவ ஒடுக்கு முறைகளுக்கு எதிராக, எமது பாதுகாப்புக்காக நாம் ஆயுதமேந்த வேண்டியேற்பட்டது. நாம் இராணுவ அமைப்பாக மாறினோம். ஆனால் எமது இலக்கு என்பது முழுமையாகவே அரசியல் மயமானது. இதில் எமது தாயகத்திலோ எம்மிடத்திலோ எதுவித வேறுபாடும் இல்லை. ஆனால் மக்களின் போராட்டங்களை, ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் ஒடுக்கிக் கொண்டே இருந்தால் ஒரு விடுதலைப்போராட்ட அமைப்பு என்ற பொறுப்பில் உள்ள விடுதலைப் புலிகள் அதற்குரிய தக்க பதிலடியைக் கொடுப்பார்கள். எமது இலக்கு என்பது தமிழ் மக்களின் முழுமையான அரசியல் விடுதலைதான். நாம் அதைபேச் சுக்களினூடே அடையமுடியுமானால் நாம் அதற்குத் தயார். ஆனால் அனைத்துமே அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறது.

**கேள்வி** - தமிழர் தாயகக் கோட்பாடு பற்றி?

**பதில்** - தமிழர் தாயகம் என்பது வரலாற்று உண்மை. வரலாற்றை அரச தரப்பினர் திரும்பிப் பார்க்க வேண்டும். கடந்த 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை தமிழர்களுக்கான ஒரு நாடு இங்கே இருந்தது என்பது வெளிப்படையான உண்மை. இங்கே தமிழர்களின் இறையாண்மையுள்ள ஒரு நாடு இருந்தது. உயர்ந்த பண்பாட்டுடனும், கலாசாரத்துடன் தமிழ் மக்கள் தங்கள் நாட்டில் வாழ்ந்தனர்.

இழந்துவிட்ட அதை தற்போது மீட்டு எடுக்கிறார்கள். 60 முதல் 70 வீதமான எமது தாயகப் பகுதியை விடுதலை செய்துள்ளோம். இந்த செயற்பாடு அடுத்த கட்டத்துக்கு நகர்வதை எவராலும் தடுக்க முடியாது. அதுவே உண்மை. அரச தரப்பினர் சொல்வது போல் ஒற்றையாட்சி கோட்பாடு என்பது கற்பனையானது. இந்த உண்மையை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தால் அதற்காக உரிய விலையை அவர்கள் கொடுக்க நேரிடும். அந்த விலையானது மிகக் கடுமையாக, அவர்களுக்குப் பேரழிவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

நாம் அப்போது இருண்ட காலத்தைத் தான் பார்த்து வருகிறோம். ஆனால் நாம் முழுமையாக நம்பிக்கையற்றவர்கள் அல்ல. தொலை தூரத்தில் உள்ள அடிவானத்தில் ஒரு சிறு நம்பிக் கைக் கீற்று தென்பட்டாலும் நாம் மகிழ்ச்சியடைவோம். அதைத் தக்க வைத்துக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு முன்னெடுத்துச் செல்வோம். நாங்கள் ஒளிமயமான எதிர்காலத்தையே விரும்புகிறவர்கள் என தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

# ரொனி பிளேயரின் வீட்டை சுற்றிவளைத்து போராட்டம்

லண்டன் —

இங்கிலாந்து பிரதமர் ரொனி பிளேயர் வீட்டை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். அவரது வீட்டுக்கு செல்லும் அனைத்து வீதிகளும் அடைக்கப்பட்டன.

இங்கிலாந்தில் கிரீன்பீஸ் என்ற அமைப்பு உள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாக்க இந்த இயக்கமும் போராடி வருகிறது.

நாளுக்கு நாள் போராட்டம் அதிகரித்து வருவதை தடுக்கவும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் பிரதமர் பிளேயர் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டார் என்று புகார் கூறி இந்த அமைப்பினர் நடத்திய பேரணி லண்டன் நகரில் உள்ள டவுனிங் வீதிக்கு சென்றது. அங்கு தான் பிரதமர் ரொனி பிளேயரின் வீடு உள்ளது.

போராட்டக்காரர்கள் அந்த வீட்டை முற்றுகையிட்டனர். அதுமட்டுமின்றி லொறிகளிலும் வான்களிலும் ஏராளமான குப்பைகளை கொண்டு வந்து கொட்டினார்கள். தொன்கணக்கில் குவியல் குவியலாக நிலக்கரியையும் கொண்டு வந்து கொட்டி பிரதமர் வீட்டுக்கு செல்லும் 3 பாதைகளையும் வாசல்களையும் அடைத்துவிட்டனர்.

இதனால் ரொனிபிளேயரும் அவரது வீட்டினரும் வெளியே வர முடியவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# கனடாவில் சகோதரர்கள் கொலை மேலும் ஒரு இளைஞர் கைது!

ஒன்ராரியோ

கனடாவில் ஸ்காபரோ நகரில் - வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இரு சகோதரர்கள் காரால் மோதிக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் - இரண்டாவது சந்தேக நபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

சௌமியன் நகுலசிகாமணி, சந்திரசேகர் நகுலசிகாமணி ஆகிய சகோதரர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கனடியப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இவர்களில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ரொரன்ரோவில் வைத்து எட்வின் ராசநாயகம் என்ற 19 வயதுடைய இளைஞரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

வன்கூவரைச் சேர்ந்த இவரை கைது செய்ய கடந்த 10 ஆம் திகதி பொலிஸாருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் வன்கூவர் மாகாண நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்தார்.

கடந்த செப்ரெம்பர் 23ஆம் திகதி இரண்டுபேரை காரால்மோதி கொன்றும், ஒருவரைப் படுகாயப்படுத்திய சம்பவம் தொடர்பாகவே இவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

# தாக்குதல் அணி போராளிகளுக்கு பிகே ஆயுதப் பயிற்சிகள் நிறைவு!



கிளிநொச்சி

விடுதலைப் புலிகளின் போர்ப்பயிற்சிக் கல்லூரியில் தாக்குதல் அணி போராளிகளுக்கான சிறப்பு பிகே ஆயுதப் பயிற்சிநெறி நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நடைபெற்றது.

போராளி கடற்பருதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியைச் சேர்ந்த கொலம்பஸ் ஏற்றி வைத்தார்.

மாவீரர் நினைவுப்படத்துக்கான மலர் வணக்கத்தை லெப்.சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் செலுத்தினார்.

தொடர்ந்து பயிற்சிநெறியில் பங்கேற்ற போராளிகளின் கலைநிகழ்வும் வடபோர்முனை கட்டளைத் தளபதி கேணல் தீபனின் சிறப்புரையும் இடம்பெற்றன.

இறுதியாக பயிற்சிநெறியில் பங்குபற்றிய போராளிகளுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டதுடன், சிறப்பாக செயற்பட்ட போராளிகளுக்கான கௌரவப் பரிசில்களும் வழங்கப்பட்டது.



படங்கள் : விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு

# கோஷ்டி மோதலுக்கு தயாரான 14 பேர் ஆயுதங்களுடன் கைது!

யாழ்ப்பாணம்

நள்ளிரவுவேளையில் கோஷ்டி மோதலுக்கு தயாராகிக் கொண்டிந்த இளைஞர் குழு கோப்பாய் பொலிஸாரிடம் சிக்கியது. இதன்போது 14 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் பெற்றோல் குண்டுகள், வாள், கத்தி உட்பட வாகனங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன.

நேற்று நள்ளிரவு கோண்டாவில் வீரபத்திரர் கோவிலடி பகுதியில் வைத்து இந்த இளைஞர் கோஷ்டி பொலிஸாரிடம் சிக்கியது.

கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த பெண்ணொருவரை கடத்திச் சென்றபின்னர், இவர்களுக்கும் கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கும் ஏற்பட்ட தகராறை அடுத்தே, கோண்டாவிலை சேர்ந்த இளைஞரின் நண்பர்கள் கொக்குவில் பகுதியிலுள்ள யுவதியின் உறவினர்களை தாக்குவதற்கு தயாரான வேளையில், சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் 14 பேரைக் கைது செய்தனர். இவர்களுடன் நின்றிருந்த ஏனைய இளைஞர்கள் தப்பியோடி விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 4 பெற்றோல் குண்டுகளும், 4 வாள், இரும்புக்கம்பிகள், தடிகள் என்பனவும் கோஷ்டி மோதல்களுக்குச் செல்வதற்காக வைத்திருந்த 3 மோட்டார் சைக்கிள், ஆட்டோ ஒன்று என்பன கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட 14 பேரும் ஆறுகால்மடம், கொட்டடி, ஆனைக்கோட்டை, உரும்பிராய், கோப்பாய் யோகபுரம், நீர்வேலி, கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர்.

# சுட்டிபுரம் கிணற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்

வரணி சுட்டிபுரம் அம்மன் கோவில் கிணற்றில் இருந்து சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் கொடிகாமம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் கொடிகாமம் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 5 தமிழ் இளைஞர்கள் மட்டக்களப்பில் கைது!

மட்டக்களப்பு

மட்டக்களப்பில் ஐந்து தமிழ் இளைஞர்கள் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

பட்டிருப்புப் பாலத்தில் வைத்து றோஜன் ஜெயக்காந்தன் (வயது 33) கல்லாறு, ஜோகராசா ராஜமாணிக்கம் (வயது 28) அக்கரைப்பற்று, பிரகாசம் சத்தியமூர்த்தி (வயது 24) மட்டக்களப்பு ஆகிய மூவருமே அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்த மூவரும் பயன்படுத்திய வாகனம் மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றைத் தம்மிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் செங்கலடி கறுத்தப் பாலத்தில் வைத்து எஸ். சுரேஸ் (வயது 28), மற்றும் எஸ்.காந்தன் (வயது 21) ஆகிய இரண்டு தமிழ் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். எனினும் இவர்கள் இருவரையும் கைது செய்தமை தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் உறுதிப்படுத்தவில்லையென இரண்டு இளைஞர்களின் பெற்றோர்களும் தெரிவித்தனர்.

இதேவேளை பட்டிருப்புப் பாலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட மூவரையும் நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்தபோது அவர்களை தலா 10 000 ரூபா பிணையில்செல்ல நீதிவான் அனுமதியளித்தார்.

# வவுனியா அரசியற் பொறுப்பாளர் கண்காணிப்புக்குழுவுடன் சந்திப்பு!

வவுனியா

வவுனியா போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டத் தலைவருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளருக்குமிடையிலான சந்திப்பு நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான புளியங்குளத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் வவுனியா ஈச்சங்குளப் பகுதியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் இராணுவத்தினர் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துகொண்டதாகவும் இந்த நிலை தொடருமானால் மக்கள் இராணுவத்துக்கு எதிராக போரிடும் நிலை ஏற்படும் என்றும் எனவே இராணுவத்தினரை இந்தச் செயலை நிறுத்துமாறு கோரியதாகவும் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானம் மற்றும் வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜோனி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மோசடிகள் நடைபெறாவிடின் வெள்ளி காலை தேர்தல் முடிவு!

கொழும்பு

வாக்களிப்பு நிலையங்களில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாவிட்டால் நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகளை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலையே அறிவிக்கமுடியும் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

## புத்தளம்...

எரிந்து விழுந்ததற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லை.

இந்தச் சம்பவத்தைக் கண்டதாகக் கூறப்படும் மீனவர்கள்மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

## பாதுகாக்கும்...

வாதிகள் போர். மற்றையது பொருளாதாரத்தை கீழ் நோக்கிச் சரியச் செய்தல் மற்றும் அடிப்படைவாதிகளால் அப்பாவி புத்த மதத்தவர்களும் மற்றும் மதத்தவர்களும் மதம் மாற்றப்படுவது.

எனவே இந்த நாட்டின் தலைவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதுடன், பயங்கரவாதத்தைத் தோற்கடித்து நாட்டை சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்லவேண்டும்.

மதமாற்ற தடைச் சட்ட திருத்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வருவது அவசியமானதாகும். இதன் மூலம் மத சுதந்திரம் பாதுகாக்கப்படும்.

எனவே, நாம் இரு பிரதான வேட்பாளர்களையும் கேட்பது என்னவெனில் தேர்தலை வன்முறையற்ற வகையில் நடத்தி உயிருக்கும் சொத்துக்களுக்கும் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் உத்தரவாதத்தை வழங்கவேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொத்தணி நிலையங்களுக்கு கொழும்பிலிருந்து அதிகாரிகள்!

கொழும்பு

யாழ்.குடாநாட்டிலுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் பணியாற்றுவதற்கென 150 அதிகாரிகள் நேற்று கொழும்பிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்களைவிட, புத்தளப் பிரதேசத்தில் இருந்து மேலும் ஒரு குழுவினர் தேர்தல் பணிகளுக்காக வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மொத்தமாக 700 பேர் வடக்கு-கிழக்குக்குப் பகுதிகளுக்கு தேர்தல் பணிகளுக்காக நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

# சிங்கள குடும்பஸ்தர் ஒருவர் திருமலையில் சுட்டுக்கொலை!

திருகோணமலை

திருகோணமலை பாலையூற்றுப் பகுதியில் சிங்களவர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுப்பிற்பகல் 1.30 மணிக்கு பாலையூற்று அன்னை வேளாங்கன்னி வீதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அபயபுரம் பகுதியைச் சேர்ந்த விஜயபாலா (வயது 40) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவரது சடலம் திருகோணமலை பொலிஸாரினால் மீட்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதியில் வீதியால் சென்றவர்களை மறித்து சோதனையிட்டனர்.

(10,4)

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாகனங்கள் கடும் சோதனை!

கொழும்பு

வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலிருந்து வெளியேறும் அனைத்து வாகனங்களும் நேற்று முதல் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக, விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லெவ்கே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கையாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. வாகனங்களைச் சோதனையிடுவதற்காக வடக்கு - கிழக்கு எல்லைகளில் விசேட அதிரடிப்படைக் குழுக்கள் ஈடுபடுத்தப்படும்.

இதேவேளை, தேர்தல் நாளன்று கிழக்கின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

கொத்தணி வாக்குச் சாவடிகளுக்கென தனியான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதர இடங்களில் பாதுகாப்பிற்காக விசேட அதிரடிப்படையினரை ஈடுபடுத்த வேண்டிய அவசியம் இதுவரை எழவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

## முகவர்களுக்கு...

இதனை மீறி கடமைக்குச் செல்லும் தேர்தல் முகவர்கள் அதற்குரிய தண்டனையை வலிந்து பெற்றுக் கொள்ள நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அரசியல்...

அதன் பின்னர் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது. நேற்றுக்காலை அவர்கள் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்துக்கு அமைச்சர் ஒருவரின் குழுவினரே காரணம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈ.பி.டி.பி...

இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்புடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோதும் பின்னர் காயமுற்ற இவரை படையினர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

இப்பத்திரிகை இல.267, காவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.11.2005 அன்று [illegible] அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.